PRESENTED BY THE MINISTRY OF EDUCATION AND SOCIAL WELFARE, GOVERNMENT OF INDIA

சிவமயம்

# அகோரசிவாசாரியார்

இயற்றிய

# சைவ ஷோடசப் பிரகாசிகை

## வியாக்யாநம்

ஓ

பண்டிதராஜ ஸ்ரீ. ஸுப்பிரமண்ய சாஸ்திரிகள்
அவர்களால் பார்வையிடப்பட்டு
தென்னிந்திய அர்ச்சகர் அசோசியேஷன்
பண்டிதர்களுடைய உதவியாலும்
சிவஞானபோத யந்திரசாலை உரிமையாளர்
வார்களால் கொடுக்கப்பட்ட உரிமையுடன்
அச்சிடப்பட்டது.

தென்னிந்திய அர்ச்சகர் அசோசியேஷன்
10-11, தம்புசெட்டித் தெரு, சென்னை-1
S. No. 39/1950
பொதுக்காரியதரிசி
ஸ்ரீ சி. சுவாமிநாத குருக்கள் அவர்களால்
வெளியிடப்பட்டது.
குரோதி ௵ ஆவணி ௴

ரிஜிஸ்டர்டு காபிரைட்] 1964 [விலை ரூ. 1.

உ

சிவமயம்

22611

# அகோரசிவாசாரியார்

இயற்றிய

# சைவ ஷோடசப் பிரகாசிகை

## வியாக்யானம்

22611

❋

**பண்டிதராஜ ஸ்ரீ ஸுப்பிரமண்ய சாஸ்திரிகள்**
*அவர்களால் பார்வையிடப்பட்டு*
*தென்னிந்திய அர்ச்சகர் அசோசியேஷன்*
*பண்டிதர்களுடைய உதவியாலும்*
*சிவஞானபோத யந்திரசாலை உரிமையாளர்*
*வர்களால் கொடுக்கப்பட்ட உரிமையுடன்*
*அச்சிடப்பட்டது.*

—o—

**தென்னிந்திய அர்ச்சகர் அசோசியேஷன்**
*பதிவு எண் 39/1950*
*10-11, தம்புசெட்டித் தெருவு, சென்னை-1.*
*பொதுக் காரியதரிசி*
**ஸ்ரீ சி. சுவாமிநாத குருக்கள் அவர்களால்**
*வெளியிடப்பட்டது.*
*குரோதிஸு மார்கழிமீ*

*ரிஜிஸ்டர்டு காபிரைட்]* *1965* *[விலை ரூ. 1*

Hamsas Press, Madras 2.

# முகவுரை

மஹா சிவபக்தரும் ஸகல சாஸ்திராபிக்ஞருமான அகோரசிவாசாரியாரியற்றிய **சைவ ஷோடசப் பிரகாசிகை** இப்பொழுது இரண்டாவது தடவை அச்சிட்டு வெளியிடப்படுகிறது. இந்த உத்தமமான நூலில் சிவத்விஜர்கள் அனுஷ்டிக்கவேண்டிய கர்ப்பாதானம் முதல் விவாஹம் வரையிலுள்ள பதினுறு ஸம்ஸ்காரங்களும் வேதோக்தமான பிரகாரத்தில் பல ஆகமங்களின் உதவியைக் கொண்டு பிரயோகமாக எழுதப்பட்டிருகின்றன, இந்த ரீதி கொஞ்சம் ஆபஸ்தம்பாதிகள் கூறிய ரீதிக்கு முரண்பாடாயினும் வேதத்தையே தழுவியது. முக்கியமான கிரியைகளில் கொஞ்சமும் வேறுபாடில்லை. ஆனல் சிவபெருமான் பரமான மந்திரங்களே பெரும்பாலும் உபயோகப்பட்டிருக்கின்றன. இவ்விடம் உபயோகிக்கப்பட்ட ஆகமங்கள் ஸுப்ரபேதம் ஸூக்ஷமம் வீரதந்த்ரம் வாதுலம், முதலியன இத்துடன் சாரதா திலகம். ஸ்மிருதி ஸாரம் முதலிய பொதுவான நூல்களும் ஸம்மதியாக எடுக்கப்பட்டிருகின்றன.

மேலும் "நாஶிவ: ஶிவமர்சயேத்" என்ற நியாயப்படி விவாஹாதிகளிலும் தன்னை சிவனுகவும் வதுவை சக்தியாகவும் தியானிக்கச் சொல்லுகிறுர். இதன்படி ஸம்ஸ்காரங்களை செய்வித்தால் ஸ்ரீபரமேச்வரனுடைய அனுக்ரஹத்தை யடைந்து கடைசியில் சிவஸாயுஜ்யத்தையும் அடையலாமென்பது தீர்மானம்.

இந்தப் பதிப்பில் வியாகரண அசுத்திகள் பெரும்பாலும் திருத்தப்பட்டிருக்கின்றன. சில விடங்களில் இருந்தாலும் விஷயத்தை அறிந்துகொள்ள சிரமமிராது. ஆதலால் இந்தப் பதிப்பை அனைவரும் உபயோகிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**ஸ்ரீ ஸுப்பிரமண்ய சாஸ்திரிகள்.**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| உபோத்காதவிதி | 1 |
| ஸங்கல்பம் | 4 |
| புண்யாஹவாசனம் | 5 |
| ம்ருத்ஸங்க்ரகணம் | 7 |
| அங்குரார்ப்பண காலம் | 9 |
| அங்குரார்ப்பண விதி | 11 |
| ரக்ஷாபந்தன காலம் | 20 |
| ரக்ஷாபந்தன விதி | 20 |
| நாந்தீமுக ஸ்ரார்த்தகால விதி | 22 |
| ஸ்திரீபிரதானகர்மவிதி | 24 |
| க்ஷெளரகர்மவிதி | 25 |
| சீமந்த நிர்ணய விதி | 25 |
| நவக்ரஹ பூஜாவிதி | 26 |
| அக்னிமுகவிதி | 30 |
| முதலாவது ருது சங்கமனவிதி | 32 |
| இரண்டாவது கருப்பாதானவிதி | 41 |
| மூன்ருவது பும்ஸ்வன விதி | 42 |
| நான்காவது சீமந்தவிதி | 43 |
| ஐந்தாவது ஜாதகர்மவிதி | 46 |
| ஆருவது உத்தாபன கர்மவிதி | 49 |
| ஏழாவது நாமகரணவிதி | 50 |
| எட்டாவது உபநிஷ்க்ரமணவிதி | 52 |
| ஒன்பதாவது அன்னப்ராசனவிதி | 55 |
| பத்தாவது பிண்டவர்த்தனவிதி | 57 |
| பதிேைராவது க்ஷெளரகர்மவிதி | 58 |
| பன்னிரண்டாவது உபநயனவிதி | 61 |
| பதின்மூன்ருவது காண்டோபகரண விதி | 63 |
| பதிஞன்காவது காண்டமோசனவிதி | 64 |
| பதிைந்தாவது சமாவர்த்தனவிதி | 66 |
| பதிஞருவது விவாஹவிதி | 67 |

உ

சிவமயம்

# அகோரசிவாசாரியார்

இயற்றிய

# சைவ ஷோடசப் பிரகாசிகை

## வியாக்யாநம்

—o—

### உபோத்காத விதி

ஓம்:— மதப்ரவாஹத்தால் நனையப்பட்ட கபோலத்தை உடைய வண்டுகள் சூழ்ந்தரற்றுநின்ற சங்கீதத்தை யுடையவரான யானைமுகக் கடவுளை நமஸ்கரிக்கின்றேன்.

**சுப்ரபேதம்:**—வீராகமப்படி நான்கு வர்ணத்துச் சைவர்கட்கும் ஷோடசக் கிரியைகளைக் கூறுகின்றேன்.

சைவர்கட்கு ஷோடசக் கிரியையைக் கூறுகின்றேன். சிவ யாகத்தில் யாதொருவர் தீக்ஷிக்கப்படுகிறார்களோ அவர்கட்குப் பரமாத்மரான ஈஸ்வரரால் ஷோடச கர்மங் கூறப்படுகின்றது.

யாவத் வர்ணங்கட்கும் சைவ ஷோடச கர்ம மின்று. அவாந்வர சைவர்கட்கு அநுஷ்டாநம் விசேஷமாவும். தாந்த்ரிக மார்க்கமாகப் பிரயோக மார்க்கங் கூறுகின்றேன். ஆதிசைவர் அநு சைவர்கட்கு இந்தச் சூத்திரம்

விதிக்கப்படுகிறது. அவாந்தர சைவர்கட்குக் கூறப்பட வில்லை. சூத்ராதிகட்கும் நீக்கல் வேண்டும்.

**சந்தாநம்:**—வைதிகத்தோடும் தாந்த்ரிகத்தோடும் கூட்டிச் சகலக் கிரியைகளையும் அநுஷ்டிக்க வேண்டும், தாந்த்ரிக மின்றிச் செய்யும் சிவதீக்ஷையும் பலமின்று, ஆகையால் வைதிக தாந்த்ரிகங்களில் சிவ மந்திரத்தை யநுஷ்டிக்கவேண்டும். அவ்வாறே க்ஷத்ரிய வைசியர்களு மநுஷ்டிக்கவேண்டும். சூத்ர ஜாதி கேவலமாக மோக்த மனுஷ்டிக்கவேண்டும்.

**பிருஹஸ்பதி:**—பிராமணர்கட்கு வைதிகமும் க்ஷத் திரியர்க்கு வைதிக தாந்திரிகங்களும் வைச்ய சூத்ரர் கட்கு தாந்திரிகமும் சகலருக்கும் தாந்திரிகமுமாகும்.

**காமிகம் ராஜரக்ஷா ப்ரகரணம்:**—நான்குவித மந்த்ர வர்ணங்கட்கும் மந்த்ரோச்சார பேதம் கூறப்படுகிறது. நான்கு ஜாதிகளோடு கூடிய சர்வ மந்த்ரங்களும் யோக்யமாகும். நான்கு ஜாதி யென்பது மந்திர ஜாதிக ளாறினுள் நான்கு. அஃதாவது:— பிரணவாதி நமோந் தம் பிராமணர்கட்குச் சேர்க்கத்தக்கது. ஸ்வாஹாந்தம் க்ஷத்ரியர்கட்குச் சேர்க்கத்தக்கது. வைசியர்கட்கு வௌஷடந்தமாகும். சூத்ரர்கட்கும் வௌஷடந்தமாகும். அவ்வாறு தேவத்யாநத்துடன் செய்யத்தக்கது. அந்தந்த ஜாதிமந்திரங்களுடன் ரக்ஷா விதியானது கூறப்படுகி றது.

**ஸ்கந்த காலோத்தரம்:**— ஜாதியுத்தாரண ஹோம மொவ்வொன்றிற்கும் நூறுநூருகும். ஓ ஷண்முகரே சூத்ர ஜாதிகட்கு அக்நியால் தஹித்தல் வேண்டும். சத் சூத்ரத்வத்தை யுண்டாக்கிப் பின்பு சைவ ஷோடச

க்ரியையைச் செய்தல் வேண்டும். சாக்ஷாத் ப்ராம்ஹணத்வ முண்டான பின் தீக்ஷையைச் செய்தல் வேண்டும். த்ரைவர்ணிகர்கட்கு மிவ்வாறு விதிப்படி புத்திமான்கள் செய்தல்வேண்டும்.

பாலரத்நாவலி காரரால் கூறப்படுவது:— சத் சூத்ரர்கட்கு ஆகமோக்த தீக்ஷா சம்ஸ்காரம், அசத் சூத்ரர்கட்கு தந்த்ர தீக்ஷா சம்ஸ்காரம். இவ்வாறு முறையே சொல்லப்படுகின்றது. அவாந்தர சைவர்கட்கு ஆகமோக்தப்ரகாரம் ஜாதகர்ம முதலான சம்ஸ்காரம் அந்யர்கட்கு மந்த்ர மின்றி சம்ஸ்காரம் செய்தல் வேண்டும்.

**வீரதந்த்ரம்:**—அவாந் தர சைவர்கட்கு உத்தமமான ஆசாரம் கூறுகின்றேன். சிவாந்த ஹ்ருதய மந்திரத்தால் நிஷேக முதலானதாகும்.

**த்ரிசதி காலோத்தரம்:**—யாதொரு காரியம் சிறிது சொல்லப்பட்டதும் சொல்லப்படாததுமாயிருக்கப்படுகிறதோ அவையாவும் ஹ்ருதயத்தாற் செய்தல் வேண்டூர். ஆதலால் த்ரை வர்ணிக்ர்கட்கும் வேதாத்யநமாகும். நான்காவது வர்ணத்தாற்கும் ஆகமாத்யயநமுண்டென்று நீலகண்ட பாஷ்யத்திற் கூறியிருப்பதால் சைவ ஷோடச க்ரியை செய்தபின் அத்யயநம் செய்தல் வேண்டும்.

**சுப்ரபேதம்:**— சத்யோஜாத ம்ருக்வேதமயமாகும் வாமதேவம் யஜுர்வேத மயமாகும். அகோரம் சாமவேத மயமாகும். தத்புருஷ மதர்வணமாகுமென கூறப்படும். ஈசாநம் சர்வவேத மயமாகும். அங்க யுக்தமான சிவ மந்திரமு மவ்வாறுகும் சாக்ஷாத் சிவமயம் காமிகாதி யாகமங்களெனக் கூறப்படுகிறது. இவைகள் அத்யய

நஞ் செய்யத்தக்கவை நான்காவது வர்ணத்தாற்கும் அத்யயநம் கூறப்படுகின்றது.

உபோத்காத விதி சமாப்தம்.

—o—

## சங்கற்பம்

**ஞானரத்நாவளி:—** ஆசமநம் செய்து சகளீகரண ந்யாசம் செய்து தர்ப்ப ஹஸ்தத்தோடு தெளிவான புத்தியுடன் ப்ரணவத்தோடு சம்ஹிதா, மந்திரங்களைக் கூறி ப்ராணாயாமம் த்ரயம் செய்து,

ஓம் சுபே சோபநே முஹூர்த்தே ஆத்யப்ரம்ஹண த்விதீய பரார்த்தே ச்வேதவராஹகல்பே வைவஸ்வத மந்வந்தரே அஷ்டா விம்ஸத் கலியுகே ப்ரதமபாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதக்கண்டே மேரோர் தக்ஷிண பார்ச்வே சகாப்தே அஸ்மின் வர்த்தமானே வ்யாவஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே——நாமஸம்வத்ஸரே——அயநே ——ருதௌ ——பக்ஷே ——சுபதிதௌ ——வாஸரயுக்தாயாம் சுபநக்ஷத்ர சுபயோக சுபகரண ஏவங்குண விசேஷண விசிஷ்டாயா மஸ்யாம் சுபதிதௌ அஸ்மாகம் ஸஹ குடும்பாநாம் க்ஷேம ஸ்தைர்ய விஜய ஆயுராரோக்ய ஐஸ்வர்யாபி வ்ருத்யர்த்தம் ஸமஸ்த துரிதோப ஸாந்த்யர்தம் சமஸ்த மங்களா வாப்த்யர்த்தம் தர்மார்த்த காம மோக்ஷ சதுர்வித பல புருஷார்த்த ஸித்யர்த்தம் ஆயுஷ்மத் ஸந்தான ஸம்ருத்யர்தம் ஆதித்யாதீநாம் நவாநாம் க்ரஹாணாம் ஆநுகூல்யஸித்யர்த்தம் ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் மம ஸமஸ்த பாபக்ஷயார்த்தம் சிந்தித மநோரத ஸித்யர்த்தம் இஹஜந்மநி பூர்வ ஜந்மநிஜந்மஜந்மாந்

தர தோஷபரிஹாரார்த்தம் ஷோடச கர்மணி மண்டப சுத்யர்த்தம் விக்நேசுவர பூஜாபுரஸ்ஸாம் சுத்தி புண்யாஹ வாசநம் கரிஷ்யே.

இதி க்ரியாதீபே ஸங்கல்ப விதி ஸமாப்தம்.

—o—

## புண்யாஹவாசநம்

ஆசாரியர் பஸ்மஸ்நாநம் செய்து வெள்ளை வஸ்திரமும் வெள்ளைப் பூணுநூலும் தரித்து ஆசமனமும் சகளீகரணமும் பிராணயாம த்ரயமும் செய்து வடக்குமுக நோக்கியிருந்து சர்வாலங்கார மண்டப மத்யத்தில் நாற்கோண மண்டலம் செய்து நெல்லிட்டு அதிற் பாதி யரிசியும் அதிற் பாதி எள்ளுமொன்றின்மேலொன்றமைத்து அதன் நடுவில் ஒட்டை ஜாணளவு தாமரை யிதழ்ச் செய்து அதன் நடுவில் லக்ஷ்மியைப் பூஜித்து அதன்மேல் நூலாற் சுற்றப்பட்டும் மாவிலை அரசுமாதுளைத் தளிர்களோடு கூடியும் ஸ்வர்ண ரத்ந நாளிகேர தோய சஹித கரகமாவது கலசமாவது அமைத்து அதனடியில் ஓம் ஹாம் ப்ரம்ஹணே நம: - மத்யே ஓம் ஹாம் விஷ்ணவே நம: - ஓஷ்டே ஓம் ஹாம் ருத்ராய நம: - தக்ஷிணே ஓம் ஹாம் நந்திநே நம: - வாமே ஓம் ஹாம் மஹாகாளாயநம: என்று அர்ச்சித்து கும்பமத்தியில் ஓம் ஹாம் கங்காயை நம: - ஓம் ஹாம் யமுநாயைநம: - ஓம் ஹாம் நர்மதாயை நம: - ஓம் ஹாம் ஸரஸ்வத்யை நம: - ஓம் ஹாம் கோதாவர்யை நம: - ஓம் ஹாம் காவேர்யை நம: - ஓம் ஹாம் தாம்பரபர்ண்யைநம: - என்று ஆவாஹனஞ் செய்து பூஜித்து வஸ்த்ர யக்ஞோபவீத கந்த புஷ்பங்களா லலங்கரித்து தூபதீப நைவேத்ய பாநீய தாம்பூலங் கொடு

த்து ஜபத்தை முடித்து நிரீக்ஷணாதி சதுஸ் ஸம்ஸ்காரங்களாற் சுத்தி செய்து தர்ப்பையோடு கூடிய வலது கையால் ஈசாநாதி ஜபஞ் செய்து பின்பு மூலமந்திரத்தால் நூற்றெட்டு ஜபஞ் செய்து திக்பந்தநாதிகளைச் செய்து ஹும்படந்தாஸ்த்ர மந்த்ரத்தால் தூபதீபங் கொடுத்து பிறகு அகோராஸ்த்ர மந்த்ரத்தாற் புரோக்ஷிக்க,

அல்லாவிடில் ஓம் ஹாம் ஶிவாய தேவதேவாய மஹாதேவாய பாமிநே ருத்ராய ஸ்தாணவே நித்யம் ஹாரயோக்ராயதே நம: பரமேசாய ஶித்தாய ஸர்வஷித்தி ப்ரதாயிநே த்ரியம்பக மஹேசாய அதிஶாந்தாய தே நம: என்று இம் மந்திரங்களால் கரமப்படி ஜலத்தை யபிமந்திரித்து அஸ்த்ர மந்த்ரத்தாற் ப்ரோக்ஷிக்க. பிறகு சாந்தியுண்டாகும்.

வருணாய நம: யதாஸ்தான மடைக சாந்தி யுண்டாக புஷ்டியுண்டாக ஸந்துஷ்டியுண்டாக வ்ருத்தி யுண்டாக இடையூறில்லாதிருக்க ஆயுசுண்டாக ஆரோக்யமுண்டாக குறைவற்ற செல்வ முண்டாக தநதாந்ய நிறைவடைக ஈசாநத்திற்கு வெளியே அரிஷ்ட நாச முண்டாக ஆக்நேயத்திலிருக்கும் யாதொரு பாபமோ அது நாசமாகுக ஸர்வஶோபந முண்டாக ஸர்வஸம்பத்து முண்டாக. கிழக்கே பாஶுபதாஸ்தராய நம: தெற்கே அகோராஸ்தராய நம: மேற்கே காலாநல அஸ்தராய நம: வடக்கே க்ஷுரிகாஸ்தராய நம: மேலே அஸ்தராய நம: இவ்வாறு ஆத்மஸ்தான த்ரவ்யங்களை பாஶுபதாஸ்தரத்தாற் ப்ரோக்ஷிக்க. இவ்வாறு வாதுளாகம கிரயாதீப புண்யாஹ விதி முற்றிற்று.

—o—

## ம்ருத் சங்க்ரஹணம்

**சுப்ரபேதம்:—** நதீ தீரத்தாவது தடாகத்தாவது புஷ்பத் தோட்டத்தாவது சுத்தமான ஸ்தளத்திலாவது சென்று ஆசமித்து சகளீகரித்து ம்ருத் சங்க்ரஹணத்திற்காகச் சங்கற்பித்து சாமான்யார்க்யம் கற்பித்து அஸ்தரத்தாற் ப்ரோக்ஷித்து அவ்விடத்தில் விக்நேச்வரரைப் பூஜித்து பலஹார அப்ப நாரிகேள முதலியவற்ருல் நிவேதித்து

சந்ததம் மோதகப் பிரியரான விக்நேச்வரரே நமஸ்காரம். அநேகமா யுண்டாகும் விக்நங்களை நிர்விக்நமாக்கி எனக்குப் பிரசாதித் தருளும்.

இவ்வாறு ப்ரார்த்தித்து பிறகு புண்யாஹ வாசம் செய்து எதிரில் பூமிக்கு சாமாந்யார்க்யத்தால் அஸ்த்ரத்தாற் ப்ரோக்ஷித்து கிழக்கு வடக்கு முனைகளில் சதுஷ்கோண நவகோணங்கள் செய்து நடுவில் ஓம் ஹாம் ப்ரம்ஹணே நம: என்று பூஜித்து கிழக்கு முதலீசாந வரை அஷ்டகோணங்களில் ஓம் ஹாம் அநந்தாயை நம: ஓம் ஹாம் விநதாயை நப: - ஓம் ஹாம் பத்ராயை நம: - ஓம் ஹாம் ஜயந்தாயை நம: - ஓம் ஹாம் ப்ரமர்யை நம: - ஓம் ஹாம் ப்ரஸ்திதாயை நம: - ஓம் ஹாம் பரிஜ்ரும்பிண்யை நம: - ஓம் ஹாம் சூலிந்யை நம: - என்று அர்சித்து க்ரமமாக நெய் வெல்லம் கூட்டி தத்யோதநத்துடன் ஸ்வாஹாந்தம் பலியிட்டு அதன் த்ருப்தியின் பொருட்டு அர்க்யங் கொடுத்து முளை முளைத்தற் பொருட்டு மண்ணை க்ரஹிக்கின்றேனெனக் கூறி அவரிட உத்திரவால் இந்த ஸ்தாநத்தை அடைந்திருக்கிற தேவர்கள் சுகமாக அப்புறம் போகக் கடவர் என்று விண்ணப்பித்து வெளிப்

படுத்தி பலிமண்டலத்தின் முன் பூமியை த்யாநித்து அர்ச்சிக்க.

நீலவர்ணத்திற்குச் சமானயாக தேகநிறத்தையும் ப்ரகாசிக்கின்ற தாமரைக் கொப்பான மூன்று கண்களையும் இரண்டு தோட்களையும் பொன்பூணு நூலையும்

சர்வாபரணங்களுடன் கரண்ட மகுடத்தையும் சிவப்பு வஸ்திரத்தைகம் வலது கையிற் கரு நெய்தற் பூவையுமுடைய பூமாதேவியை த்யாநிக்க.

இல்லாவிடில் பூமி தேவியை சமமான முகமும் மஞ்சள் வர்ணமும் விஷ்ணு பாரியாயும் வலதுகாலை மடக்கியும் இடதுகாலை நீட்டியும்

வலதுகையிற் கருநெய்தற் புஷ்பமும் இடது கையை நீட்டியும் மேல் நோக்கிய பார்வையாயும் ஈசாந்ய முனையில் தலையைவைத்தும் நிறுதியிற் காலை நீட்டியும் சயநித்திருப்பதாயும் தியாநிக்க-

இவ்வாறு தியாநித்து ஓம் லம் பூமிதேவ்யை நம: - என்று ஆவாஹநாதி யுபசாரங்களுடன் பூஜித்து நான்கு பக்கங்களிலும் லோக பாலாதிகளை யாராதித்து நைவேத்ய முதலானவை கொடுத்து பிறகு மண்வெட்டியை அஸ்திரத்தாற் ப்ரோக்ஷித்து கூர்ச்சங்கட்டிஹ்ருதயத்தாலர்ச்சித்து கிழக்கு முகமாவது வடக்கு முகமாவதிருந்து அஸ்திர மந்திர முச்சறித்து மண்வெட்டியால் மும்முறை தோண்டிமண்ணை தத்புருஷத்தால்பாத்திரத்திலெடுத்து ஹ்ருதயத்தால் சம் ப்ரோக்ஷித்து புஷ்பத்தாலர்சித்து கவசத்தால் வஸ்திரத்தைக்கொண்டு மூடி பூமியை சமமாகச்செய்து கணேசர் லோசபாலாதிகளைமுன் பூஜித்தவாறு பராங் முகார்க்யங் கொடுத்து வெளிப்படுத்தி கஜ

முதலிய வாஹன ரூடராய் மகேச்வர ருத்ரகன்னிகையர்க ளுடன் மண்ணை எடுத்துக்கொண்டு சங்க துந்துபி ஜய சப்த ந்ருத்தகீத வாத்யங்களுடன் ப்ரதக்ஷிண க்ரமமாக யாகக்ரஹம் ப்ரவேசித்து அங்குராற்பணம் செய்க.

ம்ருத்சங்க்ரஹண விதி முற்றிற்று.

—o—

KENDRIYA ... TIRUPATI. ✱ 22611

## அங்குராற்பண காலம்

ருதுசங்கமன பும்ஸவன சீமந்த ஜாதகர்ம உத்தாயுந உபநிஷ்க்ராமண தந்தச்சேதந கர்ணவேத சௌளவ்ருத விவாஹாந்த மங்கள காரியங்களில் அங்குராற்பணம் விதித் திருப்பதால் முன் கூறியபோ லங்குராற்பணம் செய்யததக்கது.

சுப்ரபேதம்— அங்குராற்பண விதியை யிதனடியிற் கூறுகின்றேன். சர்வ மங்கள காரியா ரம்பத்திலும் மங்களமாள முளையை வ்ருத்தியடையச் செய்ய வேண்டியது.

ஸ்தாபநத்திலும் ப்ரோக்ஷணத்திலும் ஸ்நபந உச் சவங்களிலும் ஒன்பது ஏழு ஐந்து என்று நாட்களில் அல்லது சாயரக்ஷை சாயாந்ந காலங்களிலாவது அங்கு ராற்பணம் செய்யத் தக்கது. அல்லது இரவில் முதல் யாமத்துக் கடைசியில் அங்குராற்பணம் செய்யத்தக்கது. வித்தாதிகட்குச் சோம னதிபனுகையால் இரவுலும் அங் குராற்பணம் செய்யலாம். சர்வமங்கள காரியத்திலும் சர்வ சம்ஸ்கார கர்மங்களிலும் பயிர் முதலான விருத்தி ஹேதுவாயிருப்பதால் அங்குராற்பணஞ் செய்யத்

தக்கது. அங்குராற்பணத்தில் (முளைவிளைவதில்) அமங்களமுண்டாயின் அக்கர்மம் நாசமடையும்.

சாந்தி புஷ்டி யுண்டாதல் ஸ்நபநம் ருதுசங்கமம் தேவதா ஸ்தாபநம் ப்ரோக்ஷணம் ஸ்தாபநம் உச்சவம் விமானாதிகள் விவாஹம் சௌளம் உபநயநம் வ்ருதம் நிஷ்க்ராமணம் உத்தாபனம் நாமகரணம் கர்ணவேதை கஜோச்சவம் நாமகரணம் அபிஷேகம் தந்தச்சேதம் பும்ஸவநம் க்ரஹப் பிரவேசம் ஸ்ரீமந்தம் அஷ்ட கண்டம் ஆயுத க்ரஹணம் புரக்ரா மாதிவேசநம சதாபிஷேகம் யாகாங்கம் யாகசம் வேசநம் கலசஸ்தாபந முதலியவைகளில் மங்களமான அங்குராற்பணம் செய்யத் தக்கது.

பகலிற் செய்யத்தக்க சுப காரியங்கட்கு பகலிலும் இரவிற் செய்யும் காரியங்கட்கு இரவிலும் அங்குராற்பணம் செய்யத் தக்கது. பகலிலும் இரவிலும் பகலு மிரவுமே சிறந்தது. இரண்டிற்கும் எது இரவோ அதுவே இரவாகும் அல்லாவிடில் கர்மத்திற்கு எப்போது சிறந்ததோ அத்தினத்திலேயே அதங்குராற்பணம் செய்யத் தக்கது. தேவர்கட்கு அங்குராற்பணம் பகலிற் செய்யத் தக்கதன்று. நரர்கட்கு சௌளகர்மத்திற்குப் பகலிற் செய்யத் தக்கது. இரவில் நீக்கத்தக்கது. மற்ற கர்மங்களில் இரவிற் செய்யத் தக்கது. மற்றப்படியான வாஸ்து கர்மங்களிலும் சௌளோபநயநத்திலும் பகலிற் செய்க. மற்றக் காரியங்கட்கு அங்குராற்பண மிரவிற் செய்தால் சுபமாகும்.

சாரதாதிலகே—தீக்ஷை அபிஷேகம் உச்சவம் ப்ரதிஷ்டை சர்வமங்கள காரிய முதலியவைகளில் மங்களமான அங்குராற்பணம் செய்யத் தக்கது.

சூக்ஷ்மம்—அங்யமான விஷயங்களில் அங்குராற்பண மானது இரவில் செய்தால் சுபமாகும். அங்குராற்பண கர்மத்தில் அவ்வங்குரந் தவிற வேறு அங்குரங் கிடையாது. வித்தாதிகட்கு சோம னதிபதியாகையால் இரவில் அங்குரம் விதைக்க வேண்டும். பகலிற் செய்யலாகாது. அங்குராற்பணம் செய்யாவிடில் கர்த்தா நாசமடைவான்.

காரணம்—அப்போதே அங்குராற்பணம் செய்ய வேண்டுவதாயின் பகலிலாவது இரவிலாவது செய்யத் தக்கது. தீக்ஷைக்கு விதித்த ஒன்பது ஏழு ஐந்து மூன்று அப்போதேயாவது அங்குராற்பணம் செய்யத் தக்கது.

அங்குராற்பண கால விதி முற்றிற்று.

—o—

## அங்குராற்பண விதி.

முதல் யாமத்தின் கடைசியில் அங்குராற்பணஞ் செய்க.

சுபரபேதம்—மண்டபத்தின் வடக்குப் பாகத்தில் அல்லது ஈசானத்தின் அல்லது நிருதியில் மேடையமைத்து அவ்விடத்தில் சந்திரனை ஸ்தாபிக்க. பாலிகைகட்கு ஒரு படியும் கும்பத்தில் இரண்டு மரக்காலும் வைத்தல் வேண்டும். தெற்கு வடக்கு மேற்கு கிழக்காக அவ்வைந்து சூத்திரம் செய்து பதினாறு பதங்களுண்டாக்கி அதன் நடுவில் நான்கு பதங்களில் தாமரையெழுதிக் கும்பத்தை அத்தாமரையிதழின்மேல் வைத்துச் சந்திரனைப் பூஜிக்க தெற்கி லிடது பார்சத்தில் கரகத்தை புத்திமான் ஸ்தாபித்தல் வேண்டும்.

ஈசான முதற் பன்னிரண்டு பதங்களிலும் பொன் வெள்ளி செம்பு அல்லது பண்ணுற் பாலிகை கெண்டி மடக்கு என்னும் மூன்று வித பாத்ரங்களு மமைக்க, பாலிகை கண்டி மடக்குக ளென்னும் இவை பன்னிரண்டாகும். இவைகளினடியில் அறுகு அரசு காட்டுவாழை வில்வங்களை வெள்ளை நூலாற் கட்டி பன்னிரண்டு பதங்களிலுமமைக்க, பாலிகைகளை மூலையிலும் கண்டி மடக்குகளை கிழக்காதி நான்கு திக்குகளிலும் கிரமமாக வைத்தல் வேண்டும். பாலிகைக்கு ப்ரம்மாவும் கண்டிகைக்கு விஷ்ணுவும் மடக்கிற்கு ஈஸ்வரரும் அதிதேவர்களாகக் கூறப்படுகிறது. மடக்கு கண்டிகைகளில்லாவிடிற் கேவலம் பாலிகைகளாவது அமைக்க.

**வாதுளம்:**—நான்கு பாலிகை அல்லது கண்டி அல்லது மடக்காவது அமைக்க.

**சுப்ரபேதம்:**—காட்டு எருமுட்டைத்தூள் அல்லது மண்ணல் நிரைக்கப்பட்ட பாலிகை முதலியவற்றிற் பூஷாதிகளை ஸ்தாபித்து வைகர்த்தாதிகளைப் பூஜிக்க.

எவ்வாறென்னில் வைகர்த்தர் விவஸ்வான் மார்த்தாண்டர் பாஸ்கரர் ரவி லோகப்பிரகாசர் லோகசாக்ஷி த்ரி விக்ரமர் ஆதித்யர் சூரியர் அம்சுமாலி திவாகரர் இவைகளை முன்போற் பூஜிக்க.

மண்டபத்தின் வடக்கில் அல்லது ஈசான நிருதிகளில் கோமயத்தால் நாற்கோணம் செய்து அதன்மேல் இருபத்தெட்டு படி அரிசியிட்டு அதன்மேல் மேற்கு முதல் கிழக்குவரை தெற்கு முதல் வடக்குவரை அவ்வைந்து சூத்திரமிட்டு பதினறு பதங்களாக்கி மத்தியில்

நான்கு பதங்களிலும் நெல்ராசியில் எட்டிதழ்த் தாமரை செய்து அதன்மேற் கும்ப மமைத்து அதனிரண்டு பாரி சத்திலும் கரக மமைத்து ஈசானாதி கோணங்களிற் பாலிகை கண்டி மடக்குகள் பன்னிரண்டையும் தான்யத் தின்மே லமைத்து ஆசமித்து சகளீகரணம் செய்து சாமாந்யார் கயங் கொடுத்து முன் கூறிய மஹாதேவ சப்தம் யாவும் கூறி புண்யாஹவாசனம் செய்து விக்நே ஸ்வரரைப் பூஜித்து நடுக் கும்பத்தில் சோமனது ஆச னத்தை ஓம் ஸம் அம்ருதேஸ்வராசநாய நம: என்று பூஜித்து,

வெண்டாமரையின்மேல் வெண்ணிறம் இரண்டு கண்கள் இரண்டு தோட்கள் அல்லியுடன் கூடிய கைகள் வெள்ளை வஸ்திரம் தரித்திருத்தல்.

சகலாபரண பூஷிதம் முத்துமாலை யலங்காரம் சிர சில் மகுடம் ஒளி பொருந்திய மண்டலத்தா லலங்காரம்.

கிருத்திகையை வலது பக்கத்திலும் ரோஹிணியை இடது பக்கத்திலும் வெண்பட்டு வஸ்திரங்களாலும் ஸர்வாபரணங்களாலும் அலங்கரிக்கச் செய்தவராய்.

இவ்வாறு த்யாநித்து விதாநத்தால் கும்ப மத்தியில் விந்யசிக்க.

இல்லாவிடில் வெண்பிரபை இரண்டு கண்கள் பொற் குண்டலத்தா லலங்காரம் இரண்டு தோட்கள் கையி லல்லிப் புஷ்பம் அழகு பொருந்திய முன்னெற்றி மயிருடன் கூடிய முகம் பூர்வபக்ஷ ஷோடச கலைக பொருந்தி யிருப்பவராய் தியானித்து.

ஓம் ஸம் அம்ருதேஸ்வர மூர்த்தியே நம: என்று மூர்த்தியை ந்யாசித்து ஓம் ஸெளம் நேத்ரேப்யோநம, என்று நேத்ரங் கொடுத்து புஷ்பாஞ்சலி செய்து மூலம் சேர்ந்த அங்கமந்திர முச்சரித்து ஓம் ரம் வம் யம் ஸம் ஹ்ரீம் பம் ப்ரீம் அம்ருதேஸ்வராய நம: என்று இவ்வாறு ஆவாஹித்து ஸ்தாபன சந்நிதான சந்நிரோதநங்கள் செய்து ஸ்வாகதார்க்யம் (சுகமாக வந்தீரா என்று அர்க்யம்) கொடுத்து அர்ச்சிக்க.

| | |
|---|---|
| ஓம் ஹாம் த்ரிபுரசுந்தர்யை நம: | ஓம் ஹாம் குலசுந்தர்யை நம: |
| ,, நித்யகிலிந்தாயைநம: | ,, நித்யாயைநம: |
| ,, ஹேமரண்டாயைநம: | ,, நீலபதாகாயை நம: |
| ,, நித்யாயை நம: | ,, விஜயாயைநம: |
| ,, பகமாலிந்யைநம: | ,, ஸர்வமங்களாயைநம: |
| ,, விஸ்வேஸ்வர்யைநம: | ,, சாந்தாயைநம: |
| ,, ரெளத்ரியைநம: | ,, நித்யாயைநம: |

என்று ஷோடச கலைகளிலர்ச்சித்து ஹ்ருதயமுதற் கைகள் முடிவான விடங்களில்

| | |
|---|---|
| ஓம் ஸாம் ஹ்ருதயாயநம: | ஓம் ஸேம் கவசாயநம: |
| ஓம் ஸீம் சிரஸேநம: | ஓம் ஸ: அஸ்த்ராயநம: |
| ஓம் ஸூம் சிகாயைநம: | |

என்று நியசித்து மூலத்தால் ஒன்றாகச் சேர்த்து பரமீகரணம் செய்து பாத்யாசமநங்கள் கொடுத்து தூபதீபங் கொடுத்து ஹ்ருதயாதி மந்திரங்களால் லயாங்கம் பூஜித்து போகாங்க பூஜையின் பொருட்டுப் பிரார்த்தித்து ஆக்நேய ஈசாந நைருத வாயவ்ய திக்குகளில்

ஓம் ஸாம் ஸ்ருதயாய நம: ஓம் ஸைம் சிகாயை நம:
ஓம் ஸீம் சிரஸே நம: ஓம் ஸௌம் கவசாய நம:

தேவதையின் முன் ஓம் ஸௌம் நேத்ரேப்யோ நம: கிழக்கு முதல் வடக்குவரையுள்ள திக்குகளில் ஓம் ஸ: அஸ்த்ராய நம: என்று அர்ச்சித்து அர்க்கியங் கொடுத்து பிறகு வலது இடது பக்கங்களில் கிருத்திகை ரோகிணி தேவிகளை ஆவாஹநாதி அஷ்ட ஸம்ஸ்காரணங்களாற் பூஜித்து சந்தன புஷ்ப தூபதீபங்களா லர்ச்சித்து பிறகு நைவேத்திய முதலிய ஜலதாம்பூல தூப தீப ஜப முடிவு வரை யர்ச்சித்து பிறகு கிழக்குமுத லீசாநவரை காட் டெருமுட்டைத் தூள் மண் சிறிது மணல் தூள்களை நிறைக்கப்பட்ட பாலிகை முதலியவைகளில் த்வாதசா தித்தர்கட்கு ஆசனங் கற்பித்து அதன்மேல் த்வாதசா தித்த மூர்த்திகளைப் பூஜித்து அதன்மேற் ப்ரணவ நமஸ் காரங்களுடன் சதுர்த்தி யந்தமாக அவரவர்கள் நாமத் தாற் பூஜிக்க.

அஃது தெவ்வாறெனில் — வைகர்த்தரின் ஸ்வரூப மாவது; ஒரு முகம் இரண்டு கைகள் இரண்டு கைகளி லும் ஆயுதமும் ஸ்வர்ண புஷ்பமும் ஸ்வர்ணாபரண பூஷ ணம் மஞ்சள் வஸ்திரம் தரித்தவராய் த்யாநித்து கிழக் கிற்கு வடக்கிலிருக்கிற கண்டியில் ஓம் ஹாம் வைகர்த்த நாய நம: என்று பூஜிக்க.

அதன் தெற்கிலிருக்கிற பாலிகையில் விவஸ்வதரின் ஸ்வரூபம் இரண்டு முகமும் நான்கு தோட்களும் ஆயுதம் தாமறைகள் கூடிய இரண்டு கைகளும் அபய வரதத் தோடு கூடிய இரண்டு கைகளும் பிங்கள நிறமான வஸ்

திரும் பவழ பூஷணமு முடையவராய் தியாநித்து ஓம் ஹாம் விவஸ்வதே நம: என்று பூஜிக்க.

அக்நி கோணத்தி லிருக்கிற பாலிகையில் மார்த் தாண்ட ரூபம் மூன்று முகம் ஆறு தோள் அபயவரதும் ஜபமாலை கமண்டலம் இரண்டு கைகளி லிரண்டு தாமறை முத்தாபரண முடையவராய் த்யாநித்து ஓம் ஹாம் மார்த்தாண்டாய நம: என்று பூஜிக்க

அதற்கு மேற்கு பதத்திலிருக்கிற கண்டிகையில் பாஸ்கர ரூபம் நான்கு முகம் நான்கு தோட்க்ள் நமஸ் கரிக்கு மிரண்டு கைகள் தாமறைகளை யுடைய இரண்டு கைகள் சிவந்த காந்தி சிவந்த வஸ்திரம் நீலரத்ந பூஷ ணம் உடையவராய் த்யாநித்து ஓம் ஹாம் பாஸ்கராய நம: என்று பூஜிக்க.

அதன் மேற்கு பதத்திலிருக்கிற மடக்கில் ரவியின் ரூபமாவது : நான்கு முகத்தோடும் விசேஷமான எட்டுக் கைகளிலும் ஜபமாலை கமண்டலம் சூலம் பாசம் அங்கு சம் தாமறை அபய வரதங்களும் இவ்வாயுதங்களும் ரக்த வஸ்திரமும் மரகத பூஷணமும் உடையவய்ரா தியாநித்து ஓம ஹாம் ரவயேநம: எனப் பூஜிக்க.

நிருதி கோண பதத்திலிருக்கும் பாலிகையில் லோக ப்ரகாச ஸ்வரூபமாவது ராஜா வர்தத்திற்குச் சமான மும் ஐந்து முகமும் பத்துக் கைகளில் இரண்டு கைகளில் தாமரையும் சூலம் அங்குசம் தண்டம் ஜபமாலை கமண்ட லம் அம்பு வில்லு சின்முத்ரை இவைகளை வல இடக் கைகளிலும் சர்வாங்கத்திலும் நீலரத்னமும் நீல வஸ்த்ர தாரணமும் உடையவராய் தியாநித்து ஓம் ஹாம் லோக ப்ரகாசாய நம: என்று பூஜிக்க.

அதற்கு வடக்கு பதத்தில் கண்டிகையில் லோக சாக்ஷியைக் கூறுகின்றேன். ஒரு முகம் இரண்டு கைகளை யும் கூப்பி யிருத்தல் வெண்மை நிறம் பருத்தி வஸ்திர மொன்று பஸ்ம தூளிதசரீரம் உடையவராய் த்யானித்து ஓம் ஹாம் லோகசாக்ஷிணே நம: எனப் பூஜிக்க.

அதன் வடக்கு பத மடக்கில் த்ரிவிக்ரம ஸ்வரூப மாவது இரண்டு முகம் நான்கு தோள்கள்மேல் இரண்டு கைகளில் தாமரையும் கீழ் இரண்டு கைகளால் நமஸ் காரமும் நீலரத்ன பூஷணமும் நீலநிற வஸ்திரமும் உடை யவராய் தியானித்து ஓம் ஹாம் த்ரிவிக்ரமாய நம: என்று பூஜிக்க.

வாயுகோண பதத்திலிருக்கிற பாலிகையில் ஆதி த்ய ரூபமாவது ஒரு முகம் இரண்டு கைகள் இரண்டு கைகளிலும் சிகப்புத் தாமரையும் மாதுளம்பூ நிறமும் ரத்னாபரணமும் உடையவராய் தியானித்து ஓம் ஹாம் ஆதித்யாய நம: என்று பூஜிக்க.

அதன் கிழக்கு பத கண்டியிற் சூரியனின் ஸ்வரூப மாவது: ஒரு முகம் எட்டுத்தோள்கள் இரண்டு தாமரை களை யுடைய இரண்டு கைகள் கண்டாமணி தூபம் கமண் டலம் அபயம் வரதம் ஜபமாலை பொன் வஸ்திரம் பொன்னிறம் ஸ்வர்ண பூஷணம் உடையவராய் தியா னித்து ஓம் ஹாம் சூரியாய நம: என்று பூஜிக்க.

அதன் கிழக்கு பத மடக்கில் அம்சுமாலி ரூபமா வது: ஆறு முகங்கள் சிவந்த நிறம் பன்னிரண்டு கைகள் இரண்டு கைகளி லிரண்டு தாமரை தோமரம் கத்தி வாள் கேடயம் பாசம் அங்குசம் சக்தி வேதாளம் அபயம் வரதம் வல இடக்கைகளி லுடையவராய் தியானித்து ஓம் ஹ்ராம் அம்சுமாலினே நம: என்று பூஜிக்க.

ஈசாநகோணபத பாலிகையில் திவாகர ரூபம் இரண்டு முகங்கள் நான்கு கைகள் இரண்டு கைகளில் வில்வம் இரண்டு கைகளில் இரண்டு கமலங்கள் மஞ்சட் பட்டு வஸ்திரம் முத்துமாலை யுடையவராகத் தியானித்து ஓம் ஹாம் திவாகராயநம: என்று பூஜிக்க.

இவ்வாறு த்வாத சாதித்தர்களை ஆவாஹன முதல் புஷ்பதான மீருய் எட்டு சம்ஸ்காரங்களாலும் தனித் தனி கண்டி மடக்கு பாலிகைகளிலர்ச்சித்துத் தனித்தனி பாயசங்களை நிவேதித்து சுத்தமான பாத்திரத்தில் பால் வைத்து ஓம் ஹ்ரீம் சக்தியை நம: என்று பூஜித்து அதில் சென்னெல், பயறு, எள்ளு, வெண்கடுகு, உளுந்து, மொச்சை, கொள்ளு என்னும் ஏழு ஐந்து அல்லது மூன்று தான்யங்களை அஸ்திரத்தால் அலம்பி நான்கு சம் ஸ்காரங்களால் சமஸ்கரித்து சம்மிதையாற் பூஜீத்து சிவ பீஜத்தை அனுசந்தானித்து பாலில் வைத்து கண்டிகாதி களிலாதார சக்தியைப் பூஜித்து தூப தீபங் கொடுத்து சங்க காஹள முதலிய மங்கள வாத்தியங்களுடன் இரு தயத்தால் அல்லது மூலப் பிரமாங்கங்களால் வித்தாதி களை கண்டிகை முதலானவைகளில் நிறைத்து சந்திர கும்ப ஜலத்தால் தெளித்து கும்பத்தில் சுத்த ஜலத்தால் பூரிக்க கர்ம முடியும் வரை தனித்தனி பூஜித்து உத்தே சித்த தின முடிவில் சந்திரனை உத்வாசனம் செய்க.

இல்லாவிடில் சத்யோங்குரார்ப்பண காலத்தில் தேங்காய் புஷ்பம் அருகு அக்ஷதை எள்ளு இவைகளுடன் முன்போற் பூஜித்து பாலில் வித்தாதிகளை யமைத்து சந்த்ர கும்ப ஜலத்தால் தெளிக்க.

**சித்தாந்தம்:**—யஜமானர் அபிவிருத்தியின் பொருட்டு அங்குரத்தைப் பரீக்ஷிக்க. சமமாய் முளைத்து ம்ருதுவாயுமுள்ள முளைகள் சுபமாகும். கறுத்த நிறமுள்ளது அசுபமாகும். புகை நிறம் முடக்கு முளைகள் அசுபமாகையால் வர்ஜஜித்தல் வேண்டும். கறுப்பு புகை நிறம் கெடுதலைச் செய்யும். குறைவுபட்டுள்ளது ஜன நாசமடையும். வெண் கறுப்பு நிறம் துர்பிக்ஷம். குறுக்கு முளை வ்யாதியைச் செய்யும். முடக்கு முளை சத்ரு பயமுண்டாக்கும். அசுப முளைக ளுண்டாகில் சாந்தி ஹோமம் செய்க. குரு சிஷ்யர்களுடன் மூல மந்திரத்தால் ஹோமம் செய்க. அகோராஸ்த்ரத்தால் சஸ்திரத்தால் நூறு முதல் ஆயிரம் வரை ஹோமம் செய்க.

அங்குரார்ப்பண மில்லாதது யாதொரு கர்மமோ அது நிஷ்பலமாகும். அங்குரார்ப்பணஞ் செய்து கர்மங்களை யாரம்பிக்க வேண்டும். அது சுபத்தைத் தரும்.

இல்லாவிடில் வேறு விதமாய் அங்குரார்ப்பணஞ் சொல்லப்படுகிறது. சீக்கிரத்திற் செய்ய வேண்டும். கால நேரிடின் சத்யோ அங்குரார்ப்பணம் செய்க. பாலிகை முதலிய பாத்திரங்களில் தேங்காய் புஷ்பம் அருகு அக்ஷதை எள்ளுகளுடன் மூல மந்திரத்தாற் பூஜித்து நிறப்புக.

க்ரியா தீபத்தில் அங்குரார்ப்பண விதி

முற்றிற்று.

—o—

## ரக்ஷாபந்தன காலம்

**சுப்ரபேதம்:—** விவாஹம் உபநயனம் வ்ருதம் பும்ஸவனம், சீமந்தம், சதாபிஷேகம் இவைகளில் ரக்ஷாபந்தனம் விதிக்கப்படுகின்றது.

**வீரதந்த்ரம்:—** தந்தச் சேதம் கர்ணவேதை பும்ஸவனம் சீமந்தம் ஜாதகர்மம் ருது சங்கமனம் உத்தாபனம் நிஷ்க்ராமணம் விவாஹம வ்ருதம் சௌளம இவைகளில் ரக்ஷாபந்தனம் விதிக்கின்றது.

இல்லாவிடில் அங்குரார்ப்பணம் விதித்த காலங்களில் ரக்ஷாபந்தனம் விதிக்கப்படுகின்றது.

ரக்ஷாபந்தந காலவிதி முற்றிற்று.

## ரக்ஷாபந்தன விதி

ஆகமத்தில் — பாத்திரத்தில் பஸ்மத்தை வைத்து ப்ரம்ம முடியுடன் கூடிய நூற் கயிற்றை அப் பாத்திர மத்தியி லமைக்க.

ஆதார சக்தி மூதல் மாயாசக்தி வரை அர்ச்சித்து அங்கமந்திரங்களுடன் சிவனைப் பூஜித்து சிஷ்யன் வலது கையில் வாசுகியை த்யானிக்க.

ப்ரம்மாங்க்த்துடன் நிவ்ருத்தியாதி கலா மந்திரங்களால் அபிமந்திரித்து அகோரத்தால் மும்முறைச் சோதித்து கவசத்தால் கையிற் கங்கணங் கட்டுக.

த்ரியம்பக மந்திரத்தால் ரக்ஷாபந்தன முடியிடுக. ஈசாந மந்திரத்தால் சிஷ்ய லலாடத்தில் பஸ்மத்தை யிடுக. ரக்ஷாபந்தனமானது இரவில் சந்தியில் அல்லது பகலிற் செய்யலாம்.

மற்றோர்முறை ரக்ஷாபந்தனம் சொல்லப்படுகிறது. குருவானவர் சுத்தராய் பாத்திரத்தில் அரிசி தாம்பூலம் பழம் ரக்ஷாபந்தன சூத்திரம் பொன்னால் மூன்று அல்லது ஐந்தும் பொன்னிறமான பருத்தி நூலும் சேர்த்து அமைத்து வலதுகை பெருவிரலை நீக்கி அஸ்த்ர மந்த்ரத்தால் மந்திரித்து மும்முடி போடுக.

அதன் விவரமாவது:—நியமித்த நாளில் முன்னிரவில் போஜனம் செய்யாது அதிவாசமாயிருக்க. கிரியைக்குமுன் அவ்விடத்தில் நெல்லினால் மேடையிட்டு அதன் மத்தியில் தாமரை யிதழ் செய்து அதன்மேல் எள்ளு பொரி தர்ப்பை புஷ்பமிட்டு அதன் மத்தியில் யந்திரிகை யெழுதி அதன்மேல் பாத்திரமமைத்து அதன் மேல் அரிசி யிட்டு அதன்மேற் பொன் வெள்ளி வெண் பட்டு பருத்தி நூற்களினால் இயற்றிய கயிறுகளை பஸ்மத்தால் நியசித்து அந்தக் கயிறுகளை ஜலத்தாற் சுத்தி செய்து ப்ரம்மமுடி யிட்டு மஞ்சள் தூள் வெள்ளைச் சந்தணத்தாற் பூசி அரிசியின்மேல் தாம்பூலம் தேங்காய் கயிறுகளை வைத்து புண்யாஹவாசனம் செய்து இருதயத்தாற் ப்ரோக்ஷித்து மேடையில் ஓம் ஹாம் ஆதாரசக்தயே நம: யந்த்திரத்தில் ஓம் ஹாம் த்ரயம்பகாய நம: பாத்திரத்தில் ஓம் ஹாம் ப்ரகிருதிதத்வாய நம: அரிசியில் ஓம் ஹாம் சப்தகோடி மஹா மந்த்ராய நம: பொன் வெள்ளிக் கயிற்றில் ஓம் ஹாம் அனந்தாயநம: வெண்பட்டு பருத்தி நூற் கயிற்றில் ஓம் ஹாம் ஆத்மதத்வாய நம: ஓம் ஹீம் வித்யாதத்வாய நம: ஓம் ஹூம் சிவதத்வாய நம: பஸ்ம பாத்திரத்தில் ஓம் ஹாம் மாயா சக்தயே நம: பஸ்மத்தில் ஓம் ஹாம் லகுளீஸ்வராய நம: சூத்திரத்தில் சக்தியாதி குடிலைவரை அர்ச்சித்து அதில் அங்கமந்திரங்களுடன்

சிவனைப் பூஜித்து சந்தனத்தால் அர்ச்சித்து தூபதீபங் கொடுத்து சிஷ்யனை அஸ்த்ரத்தால் ப்ரோக்ஷணம் செய்து சூத்ரத்தை சம்ஹிதா மந்திரம் நிவ்ருத்யாதி மந்திரங்களால் அபிமந்திரித்து அகோரத்தால் கையால் உருவி வாசுகியை த்யானித்து கவசத்தால் வலதுகையால் குருவானவர் வலது பெருவிரலை மடக்கிக்கொண்டு முடியிடுக.

ஸ்த்ரீயாகில் முன்போற் செய்து இடது கையில் ரக்ஷாபந்தனம் செய்க.

பிறகு முடிச்சியின்மேல் ரக்ஷையின் பொருட்டு த்ரியம்பக மந்திரத்தால் பஸ்மந் தறித்து பிறகு சிஷ்யன் லலாடத்தில் ஈசான மந்திரத்தால் பஸ்மந் தறிக்க. சந்தியா காலத்திலாவது மத்தியானத்திலாவது செய்க.

ரக்ஷாபந்தன விதி முற்றிற்று.

—o—

## நாந்திமுக ஸ்ரார்த்த விதி

பும்ஸவனம் சீமந்தம் நாமகரணம் நிஷ்க்ராமணம் ஜாதகர்மம் கர்ணவேதை ருதுசங்கமம் சௌளம் உபநயனம் வ்ருதம் ஸ்நாநம் விவாஹம் க்ராமாரம்பம் கிரஹாரம்பம் கிரஹப்பிரவேசம் சாந்தி பௌஷ்டிகம் இன்னும் இதரமான சுப காரியங்களிலும் விசேஷ சுபத்தைக் கோறினவனால் பிதுர்த்தேவதைகளின் பூஜையை இயற்றல் வேண்டும். யாதொரு மூடர் அஞ்ஞானத்தாற் பிதுர் பூஜையைச் செய்யாது விடுகின்ருரோ அவர்கள் மஹாகோர நரகத்திற் பிரளயாந்தம் மூழ்குகிருர்கள்,

நாந்திமுக காலவிதி முற்றிற்று.

—o—

## நாந்திமுக ஸ்ரார்த்த விதி

**வீரதந்த்ரம்:—** பிதுர் தேவதையை யாவாஹித்து கந்தபுஷ்பங்களா லர்ச்சித்து பிதுர் பிதாமஹன் பிர பிதாமஹன் இவர்கட்கு நமஸ்கரித்து சங்கற்பித்து சிவப் பிராம்மணர்களிருவரைப் பூஜிக்க.

புத்திமான்களால் நாந்திமுகர்களான பித்ருக்கள் விஸ்வேதேவரை நீக்கி பிர பிதாமஹர் முதல் பூஜித்தல் வேண்டும். எஜமானர் வடக்கு அல்லது கிழக்கு முகயாக விருந்து நெய் தயிருடன் கூடிய மாப்பிண்டத்தைக் கொடுத்தல் வேண்டும். இரட்டைப் பிராமணர்களை வரித்து அவர்கட்குப் பூஜை பிரதக்ஷிண முதலியவைகளை பூர்வாந்ந காலத்திலேயே மங்களத்தை விரும்பினவனுற் செய்தல் வேண்டும். தெய்வத்தன்மைக்குறிய ககல வை பவங்களையும் செய்தல் வேண்டும். பலி காரியங்களைச் செய்யலாகாது.

பிண்ட விஷயத்தில் விசேஷமர்கக் கூறப்படுகிறது.

**காமிகம்:—** நாந்தீமுகத்திலும் இன்னு மிதரமான சர்வமங்கள காரியங்களிலும் தயிருடன் கூடிய மாப்பிண் டத்தைக் கொடுத்தல் வேண்டும். இலந்தைப்பழப் பிண் டம் அபசவ்யப் பூணூல் அப்ரதக்ஷணம் இவைகள் கூடா. வ்ருத்தி சிரார்த்தங்களில் கிழக்கு முகமாகவே பிண்டங் கொடுத்தல் வேண்டும். தர்ப்பையைக் கிழக்கு முகமாக அமைத்தல் வேண்டும். அக்நிஷ்வார்த்தாதி பித்ருக்களை ச்ரார்த்தத்தில் வரிப்பதுபோல் சர்வ கர்மங்களிலும் வரிக்கலாகாது. இவ்வாறு நாந்தீ ஸ்ரார்த்தம் செய்து சக்தியானுசாரம் தானம் செய்க.

அந்தப்பிரகாரம் சொல்லப்படுகிறது.

மூன்று சிவப் பிராமணர் முதலானவர்களை கிழக்கு அல்லது வடக்கு முகமாக வைத்து சமயி அல்லது புத்ரகரால் ஸ்கந்தர் சண்டர் கணாத்யக்ஷர்களை பித்ரு பிதாமஹர் பிரபிதாமஹர்களாக பாவித்து ஆவாகனாதிகள் செய்து அர்ச்சித்து கந்தாதிகளால் பூஜித்து அரிசி அல்லது போஜநத்தால் யாவரையும் திருப்தி செய்விக்க. பிறகு கோதுமை அல்லது அரிசிமாவுடன் தயிர் நெய் கலந்து இலந்தைப்பழப் பிரமாணம் மூன்று அல்லது ஆறு பிண்டங்களைச் செய்து பூமியில் கிழக்கு முனையான தர்ப்பையில் கிழக்கு முகமா யிருந்து அவ்விடத்திற்குரிய மந்திரங்களால் பிண்டங் கொடுக்க. இந்த ஸ்ரார்த்த காலத்தில் எள்ளு அப்ரதக்ஷணம் அபசவ்யப் பூணூல்கள் கூடாது.

இவ்வாறு (பூர்வாங்கம்) உதயகாலத்திலேயே செய்தல் வேண்டும். அக்காலத்திற் சக்தி மாத்ரம் தானம் செய்க.

இவ்வாறு நாந்தீமுக ஸ்ராத்தவிதி சமாப்தம்.

—o—

## ஸ்திரீ ப்ரதான கர்மவிதி

க்ரஹப் பிரவேசம் சீமந்தம் யஞ்ஞம் பும்ஸவநம் கர்ப்பாதாநம் விவாஹம் இவைகளில் ஸ்திரீகள் முக்கியமாயிருந்து செய்தல் வேண்டும்.

இவ்வாறு ஸ்திரீ ப்ரதானவிதி முற்றிற்று.

## க்ஷௌர கர்மவிதி

**வீரதந்த்ரம்:**—பாணிக்கிரஹணம் உபநயனம் சோதனம் மரணக்கிரியை தீர்த்த யாத்திரை இக் கர்மங்களில் மயிர்கழித்தல் வேண்டும். சமுத்திர ஸ்நானத்தில் மயிர் கழித்தலாகாது. பார்யை கர்ப்பிணியா யிருக்கையில் மயிர் கழித்தால் சிசு நாசமாகும்.

அதையே விசேஷமாகச் சொல்லப்படுகிறது.

மாதா பிதா குரு அம்மான் மூத்த சகோதராள் மூத்த சகோதரரின் பார்யை சிநேகிதர் உத்தமமான சிநேகிதாள் அரசர் நியாயாதிகாரி இவர்கள் மரித்த காலத்தில் கர்ப்ப தீக்ஷை இருப்பினும் தலை க்ஷௌரஞ் செய்தல் வேண்டும்.

தீக்ஷாகாலம் அபிஷேகம் நியமமான வ்ருதம் பிரேத காரியம் சூதகம் சிறைச்சாலையிலிருந்து விடுபடல் விவாஹம் இக்காலங்களில் நரபதி வசனப்படி ப்ராம்மணர்களின் உத்தரவை அனுசரித்து க்ஷௌரஞ் செய்து கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு க்ஷௌர கர்மம் முற்றிற்று.

—o—

## சீமந்த நிர்ணய விதி

**ஸ்மிருதிகளில்:**—பர்த்தா மரித்து சீமந்தஞ் செய்ய வேண்டில் விசேஷ விதியாவது கர்ப்பிணியின் பர்த்தா மரிக்கில் பிதா சகோதரர் பந்துக்கள் இவர்களிலொருவரிருந்து பும்ஸவனம் முதலிய காரியங்களைச் செய்தல் வேண்டும்.

இவ்வாறு சீமந்த நிர்ணயவிதி முற்றிற்று.

## நவக்ரஹ பூஜா விதி

சூரியனுக்கு வட்டக்ரஹ மண்டலம் அங்காரகனுக்கு முக்கோணம், சுக்கிரனுக்கு ஐங்கோணம், சந்திரனுக்கு நாற்கோணம், புதனுக்கு அம்பு போன்றது, குருவிற்கு நீண்ட நாற்கோணம், சனிக்கு விற்போல, ராகுவிற்கு முறம் போன்றது, கேதுவிற்கு த்வஜம் போன்றது இவ் வாறு க்ரஹங்கட்கு மண்டல மமைக்க.

## க்ரஹ நிறம்

சூரியன் செவ்வாய் சிவப்பு, சுக்ரன் சந்திரன் வெளுப்பு, புதன் குரு இருவருக்கும் பொன் நிறம் சனி ராகு கறுப்பு, கேது கறுப்புச் சேர்ந்த மஞ்சள் நிறம் ஆகும்.

## க்ரஹ நோக்கம்

சூரியன் சுக்ரன் புதன் கிழக்கு, குரு வடக்கு, சனி சந்திராள் மேற்கு, ஏனையோர் தெற்கு முகமாயிருத்தல் வேண்டும்.

## க்ரஹ திக்கு

சூரியன் நடு, செவ்வாய் தெற்கு, சுக்கிரன் கிழக்கு, சந்திரன் அக்நியில், குரு வடக்கு, புதன் ஈசானம், சனி மேற்கு, ராகு நிருரிதியில், கேது வாயுவில் இவ்வாறு க்ரஹஸ்தானங்கள் விதிக்கப்படுகிறது.

## க்ரஹ சமித்து

சூரியனுக்கு எருக்கு, சந்திரனுக்கு முருக்கு, செவ் வாய்க்கு கருங்காலி, புதனுக்கு நாயுருவி, குருவிற்கு அரசு, சுக்கிரனுக்கு அத்தி, சனிக்கு வன்னி. ராகுவிற்கு அறுகு, கேதுவிற்கு தர்ப்பை இவைகளில்லாவிடில் சகல ருக்கும் முருக்கு சமித்தாகக் கொள்க.

## க்ரஹ தானம்

சூரியனுக்கு பசு, சந்திரனுக்கு சிங்கம், செவ்வாய்க்கு சிவப்பெருது, புதனுக்கு ஸ்வர்ணம், குருவிற்கு வஸ்திரம் சுக்கிரனுக்கு வெள்ளி, சனிக்கு கருப்பு பசு, ராகுவிற்கு வெள்ளாடு, கேதுவிற்கு யானை இவைகளில்லாவிடில் சக்திமாத்திரம் ஸ்வர்ண தானம் கொடுக்க.

சுத்த பூமியில் கோமயத்தால் மெழுகி அதன் நடுவில் அரிசியின்மேல் அஸ்த்ரமந்திரத்தால் நாற்கோண மேடை செய்து ஒன்பது கோணமுண்டாக்கி நடுக் கோணத்தில் வட்ட மண்டலத்தில் சிவப்பு வர்ணஞ் செய்து அதன்மேல் கிழக்கு முகமாகக் கூர்ச்சத்தை வைத்து சிவ சூரியருக்கு ஆசனமிட்டு அதன் மூலத்தாற் பூஜித்து அக்னிகோணத்தில் நாற்கோண மண்டலத்தில் வெள்ளை வர்ணஞ் செய்து அதன்மேல் மேற்கு முகமாகக் கூர்ச்சம் வைத்து சோமனுக்கு ஆசனமிட்டு அதன் மூல மந்திரத்தாற் பூஜித்து தெற்குக் கோணத்தில் முக் கோண மண்டலத்தில் சிவப்பு வர்ணஞ் செய்து அதன் மேல் தெற்கு முகமாகக் கூர்ச்ச மமைத்து அங்காரக னுக்கு ஆசனமிட்டு அதன் மூலமந்திரத்தாற் பூஜித்து ஈசான கோணத்தில் அம்புவடிவான மண்டலத்தில் பொன்னிறஞ் செய்து அதன்மேல் கிழக்கு முகமாகக் கூர்ச்சமமைத்து புதனுக்கு ஆசனமமைத்து அதன் மூலத் தாற் பூஜித்து வடக்குக் கோணத்தில் நீண்ட நாற்கோண மண்டலத்தில் பொன்வர்ணஞ் செய்து அதன்மேல் வடக்கு முகமாகக் கூர்ச்சமமைத்து பிரஹஸ்பதிக்கு ஆசனமமைத்து அதன் மூலத்தாற் பூஜித்து கிழக்குக்

கோணத்தில் ஐங்கோண மண்டலத்தில் வெள்ளை வர்ணஞ் செய்து அதன்மேல் கிழக்குமுகமாகக் கூர்ச்சமமைத்து சுக்கிரனுக்கு ஆசனமமைத்து அதன் மூலத்தாற் பூஜித்து மேற்குக் கோணத்தில் வில் வடிவமான மண்டலஞ் செய்து கறுப்பு நிறமமைத்து அதன்மேல் மேற்கு முகமாகக் கூர்ச்சமமைத்து சனிக்கு ஆசனமிட்டு அதன் மூலமந்திரத்தாற் பூஜித்து நிருதி கோணத்தில் முறம்போன்ற மண்டலமமைத்து கறுப்பு நிறஞ் செய்து அதன்மேல் தெற்கு முகமாகக் கூர்ச்சமமைந்து ராகுவிற்கு பீடமிட்டு அதன் மூலமந்திரத்தாற் பூஜித்து வாயு கோணத்திற் த்வஜம் போன்ற மண்டலஞ் செய்து கறுத்த மஞ்சள் நிறமமைத்து அதன்மேல் தெற்கு முகமாகக் கூர்ச்சமமைத்து கேதுவிற்கு ஆசனமிட்டு அதன் மூலமந்திரத்தாற் பூஜித்து ஜபமுடித்து நைவேத்திய தூபதீபஞ் செய்து அர்க்யங் கொடுத்து ஹோமத்திற்காகப் பிரார்த்தித்து உத்தரவு பெற்று அக்னி மூலத்திலுண்டானதாக அக்னியைப் பூஜித்து அக்னிவய ஹிருதய கமலத்தில் சூரியாதி நவக்கிரஹ மந்திரங்களை ஆசன மூர்த்தி மூலத்தோடாவது சாதாரண மூலத்தோடாவது பூஜித்து அர்க்யங் கொடுத்து அதன் சாந்நித்தியத்தின் பொருட்டுத் தனித்தனி ஒன்பது சமித்துக்களாலும் ஒன்பது தான்யங்களாலும் ஓமித்து சருவால் தனித்தனி பூர்ணாஹுதி சஹிதம் இருபத்தெட்டாஹுதி செய்தல் வேண்டும்.

எவ்வாறென்னில் எருக்கு சமித்து கோதுமை தான்யம் சரு சூர்யமந்திரம் ஸ்வாஹாந்த மூலத்தால் இருபத்தெட்டாஹுதி செய்து முருக்கஞ்சமித்து அரிசி தான்

யம் சரு சோம மந்திரம் ஸ்வாஹாந்த மூலத்தால் இருபத்தெட்டாஹுதி செய்து கருங்காலி சமித்து துவரை தான்யம் சரு அங்காரக மந்திரம் ஸ்வாஹாந்த மூலத்தால் இருபத்தெட்டாஹுதி செய்து நாயுருவி சமித்து பயறு தான்யம் சரு புதமந்திரம் ஸ்வாஹாந்த மூலத்தால் இருபத்தெட்டாஹுதி செய்து அரசு சமித்து கடலை தான்யம் சரு ப்ருஹஸ்பதி மந்திரம் ஸ்வாஹாந்த மூலத்தால் இருபத்தெட்டாஹுதி செய்து அத்தி சமித்து மொச்சைக்கொட்டை தான்யம் சரு சுக்கிர மந்திரம் ஸ்வாஹாந்த மூலத்தால் இருபத்தெட்டாஹுதி செய்து வன்னி சமித்து எள்ளு தான்யம் சரு சனி மந்திரம் ஸ்வாஹாந்த மூலத்தால் இருபத்தெட்டாஹுதி செய்து அறுகு சமித்து உளுந்து தான்யம் சரு ராகுமந்திரம் ஸ்வாஹாந்த மூலத்தால் இருபத்தெட்டாஹுதி செய்து தர்ப்பை சமித்து கொள்ளு தான்யம் சரு கேது மந்திரம் ஸ்வாஹாந்த மூலத்தால் இருபத்தெட்டாஹுதி செய்க. சமித்தில்லாவிடில் முருக்கஞ் சமித்தால் ஹோமஞ் செய்க.

பிறகு அக்னி இருதயகமலத்தில் நவக்கிரஹ மந்திரங்களை கிரஹ மண்டலத்திற் சேர்த்து பராங்முகார்க்யங் கொடுத்து அக்கர்ம முடிவில் மண்டல நவக்கிரஹங்களைப் பூரகஞ் செய்து இருதயத்திற் சேர்க்க.

இவ்வாறு நவக்கிரஹ பூஜாவிதி முற்றிற்று.

--o—

## அக்னிமுக காலம்

**சுப்ரபேதம்:**—நித்யம் நைமித்திகம் பிரதிஷ்டை உற்சவம் க்ரஹணம் விஷுவத் காலம் சத்ருக்களைக் காணல் சாந்தி புஷ்டியுண்டாகச் செய்தல் தீக்ஷாகாலம் பவித்திரோத்ஸவம் கர்ப்பாதானம் முதலிய சைவச் சடங்குகள் தஹனகாரியம் ப்ராயச்சித்தம் முதலிய காரியங்கள் இவைகளில் அக்னி காரியஞ் செய்தல் வேண்டும்.

அக்னிமுக காலவிதி முற்றிற்று.

—o—

## அக்னிமுக விதி

சுத்த பூமியைச் சமமாகச் செய்து மணல் பரப்பி ஓடு மயிர் புழு முதலியவைகளை நீக்கி ஒரு முழப் பிரமாணத்தில் சதுரமான மேடை செய்து அதன்மேல் கிழக்கிலிருந்து மூன்று ரேகையும் வடக்கிலிருந்து மூன்று ரேகையும் சிலாகையால் ஹும்படாந்தாஸ்த்ரத்தாற் செய்து பின்பு கைகழுவி மேடையை அஸ்த்ரத்தாற் ப்ரோக்ஷித்து அரணியிற் கடைந்த அக்னியாவது வேதாத்யயனஞ் செய்தோர்களின் க்ரஹாக்னியாவது சுத்த க்ரஹாக்னியாவது மண் பாத்திரம் அல்லது தாம்ர பாத்திரத்திற் கொணர்ந்து,

அக்னியை ஜ்வாலையுடையவர் வன்னி ஜாதவேதர் ஹுதாசனர் ஸ்வர்ணவர்ணர் அனலர் சமிதர் விச்வதோமுகர் என த்யானித்து சமித்தால் ப்ரகாசிக்கச் செய்து ஹிருதய மந்திரத்தால் வேதிகையின் மத்தியில் அக்னியை பிரதிஷ்டை செய்து சாந்நித்யமாகும் பொருட்டு த்யானித்து பின்பு வேதிகையில் முழப் பிர

மாணம் ஒன்பது தர்ப்பைகளால் கிழக்கு முதல் வடக்கு வரை தனித்தனியே தெற்கு வடக்கு தர்ப்பைகளை கிழக்கு முனையாகவும் கிழக்கு மேற்கு தர்ப்பைகளை வடக்கு முனையாகவும் ஹிருதயத்தாற் போட்டு (பரிஸ் தரணஞ் செய்து) அதன்மேல் முழப் பிரமாணம் மூன்று சமித்தை தெற்கு மேற்கு வடக்குகளில் சிகா மந்திரத் தால் வைத்து குண்ட மத்தியில் இரண்டு சமித்துக்களைச் சிரோமந்திரத்தால் மேல் நோக்காகச் செய்து கிழக்கில் வைத்து குண்டத்தின் கிழக்கில் தர்ப்பையின்மேல் நெய் யைச் சத்தியோஜாத ஹிருதய மந்திரத்தால் வைத்து அஸ்திரத்தாற் ப்ரோக்ஷித்து கந்த புஷ்பங்களா லர்ச் சித்து பிறகு வேறொரு பாத்திரத்தில் வைத்து ஜலத் தாற் ப்ரோக்ஷித்து சமித்துடன் அக்னியின் மேல் வைத்து அதன் பாகத்தில் பாத்திரங்களை வைத்து அதன் மத்தியில் ப்ரம்மாவை ஆவாஹித்துப் பூஜித்துப் பிறகு மேற்கு பாகத்தில் ப்ரணீத பாத்திரம் வைத்து அதன் மத்தியில் விஷ்ணுவை கந்தாதிகளா லர்ச்சித்து பிறகு தர்ப்பை நுனியுடன் பவித்திரத்தை அஸ்திரத் தால் நெய்யில் வைத்து பிறகு ஹிருதயத்தால் அக்கினி யில் வைத்து பிறகு ஒரு தர்ப்பையால் நெய்யில் தோய் த்து அஸ்திரத்தால் அக்னியிற் போடுக.

பிறகு இரண்டு தர்ப்பை நுனியை ஹ்ருதயத்தால் அக்கினியிற் கொளுத்தி அஸ்திரத்தால் நெய்யில் போடுக. பிறகு ஸ்ருக்கு ஸ்ருவங்களை சம்ஸ்காரஞ் செய்து குண்டத்தின் வடமேற்கு பாகத்தில் ஹிருதயத் தால் சுற்றி இவ்வாறு அக்னியில் ஷோடச சம்ஸ்காரஞ்

செய்து அதன் மத்தியில் சிவத்தை முன்போற் பூஜித்து ஸ்ருவத்தை யெடுத்து நெய்யால் அகோரத்தைக் கூறி ஹ்ருதயத்தால் ருதுவாதி விவாஹ கர்மங்களைச் செய்க.

அக்னிமுக விதி முற்றிற்று.

—o—

## முதலாவது ருதுசங்கம விதி

**சுப்ரபேதம் :—** ருது ஆரம்பகால லக்ஷணத்தைக் கூறுகின்றேன். சுபமுகூர்த்த நக்ஷத்ர சந்திர பலத்தோடு கூடிய வாரங்களில் ஸ்ரீகளுக்கு ப்ரதம ரஜோ தரிசனம் நேரிடில் மிகவும் சுபத்தை விளைவிக்கும் ப்ரதம ரஜோ தரிசனத்தில் மேற்கூறிய காலங்கள் அசுபமாயின் சர்வ தோஷ பரிகாரத்தின் பொருட்டு விசேஷமான சாந்தியைச் செய்க. புத்திமான் விதிப்படி ஸ்நானஞ் செய்து நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துவிட்டு வாசலில் மேற்கட்டிகளா லலங்கரித்த பந்தலைச் செய்து அதன் மத்தியில் நெல் அரிசி எள்ளுகளால் மேடை செய்து எட்டிதழ்த் தாமரைகளை அலங்காரத்துடன் செய்து அதன் மத்தியில் இரண்டு மரக்கால் ஜலம் பூரித்த குடத்தை யமைத்துச் சுற்றிலும் எட்டு கலசங்களமைத்து அவைகட்கு நூல் சுற்றி வஸ்திரஞ் சாத்தி தேங்காய் அமைத்து ஆசாரியர் சகளீகரணஞ் செய்து விதிப்படிச் சாமான்யார்க்யங் கொடுத்து நடுவிற் சிவத்தை யாவாஹித்து கந்த புஷ்பங்களாற் பூஜித்து இவ்வாறே இந்திராதிகளை எட்டுக் கலசங்களிலும் சாந்தமான மனதோடு பூஜிக்க. புத்திமான் கிழக்கில் சைவ மனுவையும் தெற்கில் அகோரத்தையும் மேற்கில் பாசுபதாஸ்திரத்தையும்

வடக்கில் சிவாஸ்திரத்தையும் பதினாயிரம் அல்லது ஆயிரம் நூறு ஐம்பது முறை ஜபிக்க. பிறகு அக்கினி காரியத்திற் கூறியபடி சிவாக்கினியைச் சேகரித்து அதன் நடுவில் சிவத்தை யாவாஹித்து சாந்தியின் பொருட்டு வெண் கடுகு சீந்திற்கொடி வன்னி கருங்காலியோடு கூடிய நவக்ரஹ சமித்துக்களுடனும் நவதான்யங்களுடனும் க்ரமப்படி ஆஹுதி செய்து பாசுபதாஸ்திரம் சிவாஸ்திரம் சிவ மந்திரம் அகோர மந்திரங்களாற் ப்ராயச்சித்தத்தின் பொருட்டு ஹோமஞ் செய்து பிறகு அக்கினியிலுள்ள சிவத்தைப் பூஜித்துப் பூர்ணாஹுதி செய்து உத்தாபனஞ் செய்க. கும்பத்தைப் பூஜித்து தூபதீபங் கொடுத்து இந்திராதி கலசங்களையும் கிரமமாகப் பூஜித்து உத்தாபனஞ் செய்க. நாற்காலி பீடத்தில் தம்பதிகளை ஒவ்வொரு வஸ்திரத்துடன் கிழக்கு முகமாக உட்காரச் செய்து ஆயிரந் தாரை அல்லது நூறு தாரையாக சிவகும்ப முதலிய கலசங்களால் ஸ்நானஞ் செய்விக்க. இவற்றால் கெடுதிகள் நீங்கி எப்போதும் சுகத்தை யடைவர். பிராமணர்களைப் புசிப்பிக்கச் செய்து தக்ஷிணைகளால் சந்தோஷிப்பிக்க. மஹேசுராள் அல்லது அன்னியர்கள் பாசுபதர் இவர்களைச் சந்தோஷிப்பித்தும் ஆசீர்வாதம் பெறுக. பந்துக்களுடன் புசித்து ராத்திரியில் படுக்கையில் சேர்க. இவ்வாறு செய்யின் சுபத்ராளுடனும் சம்பத்தோடும் சந்துஷ்டி அடைவர்.

இல்லாவிடில் திதி வார நக்ஷத்திரங்களைப் பரீட்சித்து சுபமாயின் ருது சங்கமனஞ் செய்க. அசுபமாயின் சாந்தி செய்க.

அஃதெவ்வாறெனில் கோமயத்தால் நாற்கோணஞ் செய்து ஒரு முழம் மணலால் மேடை செய்து தான்ய

ராசியும் அதில் பாதி அரிசியும் அதில் பாதி எள்ளும் மேடையின்மேல் வைத்து அதன் நடுவில் தாமரையிதழ் செய்து தர்ப்பம் புஷ்பம் பொரிகளைச் சுத்தி யிறைத்து வருண கடத்தை யெடுத்து ஹ்ருதயத்தால் வேதிகையின் மத்தியில் தாபித்து ஓம் ஹாம் கங்காயைநம: என்று கந்தோதகத்தாற் பூரித்து நவரத்ந மிட்டு கஜ அஸ்வ ரத வராஹ வல்மீகங்களின் ஐவித மண்ணையும் ஏலம் லவங்கம் சதோஷதி தாமரை கோரோஜனை நாயுருவி கோஷ்டம் சந்தனம் குங்குலியம் இந்திரவல்லி நெய்சட்டி விஷ்ணுக்ராந்தி அறுகு இவைகளைக் கும்பத்திலிட்டு மாவிலை அரசிலை தர்ப்ப கூர்ச்சம் தேங்காய் புதுவஸ்திரம் கந்தபுஷ்பங்களால் அலங்கரித்துப் பிறகு ஆசமித்து சகளீகரணஞ் செய்து பிராணயாமஞ் செய்து சாமான்யார்க்யங் கொடுத்து முன்போல் விக்னேஸ்வர பூஜை செய்து ப்ரார்த்தித்து புண்யாஹவாசம் அங்குரார்ப்பணஞ் செய்து பஞ்சகவ்யஞ் செய்து பிறகு கும்பத்தில் ஓம் ஹாம் கங்காயை நம: - ஓம் ஹாம் யமுனையை நம: - ஓம் ஹாம் நர்மதாயைநம: - ஓம் ஹாம் சரஸ்வத்யை நம:- ஓம் ஹாம் கோதாவர்யை நம: - ஓம் ஹாம் காவேர்யை நம: - ஓம் ஹாம் தாம்பரபர்ண்யைநம: - இவைகளாலாவாஹித்து புஷ்பமாலைகளுடன் எண்வித உபசாரங்களால் பூஜித்துத் தூபதீப நைவேத்ய பானீய தாம்பூலாதிகள் கொடுத்து பிறகு நூறு வராகனிடைப் பொன் அல்லது அதில் பாதி அல்லது சக்தி மாத்திரம் வெள்ளியாலாவது பீடஞ் செய்து அதில் சர்வாலங்காரத்துடன் சந்திர ரூபமான சபையைச் சிற்பியாற் செய்து

கும்பத்தினடியி லமைத்து அர்ச்சிக்க. ஓம் ஸம் அம்ரு தேஸ்வராசனாய நம: என்று ஆசனத்தைப் பூஜித்து.

வெண்மையான ப்ரபையும் பொற்குண்டலத்தாலும் அலங்கரிக்கப்பட்டு இரண்டு தோளும் இரண்டு ஆம்பல் களை யுடைய கையும் இரண்டு கண்களும் அழகாய்ச் சுருண்டு தொங்கு முன்னெற்றி மயிருடன் கூடிய முகத் தையும் பூர்வபக்ஷ மாதியான பதினாறு கலைகளின்பேரி லிருக்கப்பட்டவராகத் தியானித்து ஓம் ஸம் அம்ருதேஸ் வர மூர்த்தயேநம: என்று மூர்த்தியில் ந்யாசித்து ஓம் ஊம் நேத்ரேப்யோநம: என்று நேத்ரங் கொடுத்து புஷ் பாஞ்சலி செய்து மூலமந்திர சாங்க மந்திரங்களை நினைத்து ஓம் ரம் வம் யம் ஸம் ஞீம் ஹும் ஞீம் அம்ரு தேஸ்வராய நம: என்று ஆவாஹித்து அர்ச்சிக்க.

ஓம் ஹாம் திரிபுரசுந்தர்யை நம:
,, நித்யக்லின்னாயை நம:
,, பேருண்டாயை நம:
,, நித்யாயை நம:
,, பகமாலின்யை நம;
,, விஸ்வேஸ்வர்யை நம:
,, ரௌத்ரியை நம:
,, குலசுந்தர்யை நம:
,, நித்யாயை நம:
,, நீலபதாகாயை நம:
,, விஜயாயை நம:
,, சர்வமங்களாயைநம:
,, ஜ்வாலாமாலாயைநம:
,, சிதுராகாயை நம:
,, சாந்தாயை நம:
,, நித்யாயை நம:

இவ்வாறு ஷோடச கலைகளிலும் அர்ச்சித்து கந்த புஷ்ப தூப தீப நைவேத்யாதிகளைக் கொடுத்து தீக்ஷையுடைய நான்கு ப்ராம்மணர்களை பாதமலம்பி ஆசமனஞ் செய்வித்து அலங்கரித்து கந்தபுஷ்பாதிகளாலர்ச்சித்து இவர்களால் கும்பத்தை தொட்டு கிழக்கில் சிவகாயத்திரியை தனித்தனி நூற்றெட்டு ஜபித்து மூலமந்திரத்தை சக்தி மாத்திரம் ஜபித்துத் தெற்கில் அகோர மந்திரம் நூறு ஜபித்து மேற்கில் பாசுபதாஸ்திரம் நூறு ஜபித்து வடக்கில் சிவாஸ்திரம் நூறு ஜபித்து ருதுவான ஸ்திரீயை நான்காம் நாள் பற்குச்சு மண் நெல்லிக்காய்களால் சுத்தி செய்து ஸ்னனஞ் செய்து பரிசுத்த வஸ்திரத்தை தரித்து அன்னியர் தரிசன சம்பாஷணைகளை நீக்கி வீட்டை யடைந்து பர்த்தாவை தரிசித்து பிறகு பஞ்சகவ்யம் அருந்தி பிறகு பீடத்தில் தம்பதிகளை உட்காரவைத்து ஒவ்வொரு வஸ்திரந் தரித்து ஆயிர தாரை அல்லது நூறு பத்து தாரைகளால் கும்பஜலத்தாலபிஷேகஞ் செய்க.

பிறகு ஸ்னனத்தின் முடிவில் நான்காம் நாள் அல்லது வேறான புண்ய தினத்திலாவது புத்ர பௌத்ரர்களின் விருத்தியின் பொருட்டு முன் கூறியபடி அக்கினியை யுண்டாக்கி அக்கினியின் மேற்கு பாகத்தில், புருஷனையும் இடது பாகத்தில் ஸ்திரீயையும் உட்காரவைத்து கர்த்தா அல்லது ஆசாரியர் வஸ்திரம் பொன் மோதிரங்களால் அலங்கரித்து ஸ்திரீக்கு முன் கூறியபடி ரக்ஷாபந்தனஞ் செய்து ஹோமஞ் செய்க.

எவ்வாறென்னில்?

ஓம் ஹாம்
அக்னயே ஸ்வாஹ்ா
,, காமாயஸ்வாஹா
,, இந்த்ராய ஸ்வாஹா
,, ப்ரம்மணேஸ்வாஹா
,, ப்ரஜாபதயே ஸ்வாஹா
,, குபேராய ஸ்வாஹ்ா
,, அக்னயே ஸ்வாஹா
,, நிருருதயேஸ்வாஹா
,, தர்மாயஸ்வாஹா
,, தர்மராஜாய ஸ்வாஹா
,, வாயவேஸ்வாஹா
,, ஸெளம்யாய ஸ்வாஹா

ஓம் ஹாம்
,, ஈசானயஸ்வாஹா
,, வசுப்யஸ்வாஹா
,, பிரஜாப்ய ஸ்வாஹா
,, ப்ரஜாபதிப்ய ஸ்வாஹா
,, ராகாயஸ்வாஹா
,, குஹேப்ய ,,
,, அனுமத்யை ,,
,, நக்தம் சரிப்ய ,,
,, ப்ரஜாப்ய ,,
,, பூஸ்வாஹா
,, புவஸ்வாஹா
,, ஸுவஸ்வாஹா
,, பூர்புவஸுவ ஸ்வாஹா
,, ஸ்விஷ்டக்ருதே ,,

பிறகு பொறி வன்னி பத்திரம் நெய் சேர்த்து ஹோமஞ் செய்க.

ஓம் ஹாம் அதித்யைஸ்வாஹா - ஓம் ஹாம் தேவ பத்னியை ஸ்வாஹா - ஓம் ஹாம் தேவமாத்ருப்ய ஸ்வாஹா - ஓம் ஹாம் திவாசரிப்ய ஸ்வாஹா - என ஹோமித்து பிறகு முற்கூறியவாறு நவச்கிரஹ ஹோமஞ்செய்து பிறகு ஹோமத்தின் முடிவில் ஓம் ஹாம் க்ருப்பந்தேஹி சினீவால்யை நமஸ்வாஹா என்னும் மந்திரங்களால் பொரி பாயசத்தைக் கொடுக்க.

பிறகு முறத்தில் அப்பம் உப்பு பயறு பாலுள்ள பசு இவைகளை ப்ராம்மண ஸ்திரீகள் அல்லது தீக்ஷையான

ஸ்திரீகட்குக் கொடுக்க. நெய் தக்ஷிணை முதலியவை ஆசாரியருக்குக் கொடுத்து பிறகு ப்ராம்மணர்கட்குத் தக்ஷிணை கொடுக்க. பிறகு நெய் கலந்த பாலை வெண்கல பாத்திரத்தில் வைத்து ஹ்ருதய மந்திரத்தால் ருது ஸ்திரீக்கு மூன்று முறை குடிப்பிக்க.

**வீரதந்த்ரம்:—** இவ்வாறு சாந்தி செய்தல் வேண்டும். தோஷங்களை அம் மந்திரங்கள் போக்கும். இவ்வாறு சாந்தி செய்து அவ்விடத்தில் ருது சங்கமத்திற்குரிய பத்தினியானவள் ப்ரதம ருது காலத்தின் மூன்று நாளுஞ் சென்று நான்காம் நாள் ஸ்நானஞ் செய்த பின் வீட்டின் ஈசான பாகத்தில் அல்லது மனோகரமான மண்டபத்திலாவது பந்தலிட்ட வாசலிலாவது கோமயத்தால் மெழுகி யலங்கரித்துச் சுத்தியாக ஸ்நானஞ் செய்து நித்யகர்மாநுஷ்டானங்களை முடித்து ஆசமித்து சகளீகரண பிராணயாமங்களைச் செய்து பத்னியுடன் சங்கற்பித்து அக்னியை யுண்டாக்கி அதன் ஹிருதயத்தில் சிவத்தை யாவாஹன முதலியவற்றால் பூஜித்து ஷடங்க பிரம்ம மந்திரங்களால் தனித்தனி பத்தாஹுதி செய்து பத்தினியை யாசமிக்கச் செய்து எவ்வாறு பஸ்மதாரணஞ் செய்யவேண்டுமோ அவ்வாறு செய்து புருஷன் அல்லது ஆசாரியர் அக்கினியை ஹ்ருதய மந்திரத்தால் வளைத்து சகளீகரணஞ் செய்க.

பெருவிரல்களால் சுண்டுவிரல் முதலிய விரல்களின் பிரிவில் ஓம் ஹாம் பரமேஸ்வர பராய பிரம்ஹ்ருதயாய ஹ்ருதயாயநம: - ஓம் ஹாம் சர்வயோகாதிக்ருதாய வித்யாதியாதியாய சிரஸேஸ்வாஹா - ஓம் ஹாம் ருத்ரரன்யை சிகாய வௌஷட் - ஓம் ஹாம் கோப்த்ரு புருஷாய

ஹூம் என்று மீட்டும் நடுவிரல் மூன்றில் ஓம் ஹாம் தேஜஸ் தேஜசித்ருபாய நேத்ரத்ரயாய ஹூம்பண்ணம: ஓம் ஹாம் ப்ரதம ப்ரதம பாசுபதாஸ்த்ராய ஹூம்பட் என்று நியசித்து இவ்வாறு அங்கந்யாசஞ் செய்து இவ்வாறு வித்யாங்கங்களாற் சகளீகரணஞ் செய்து இம் மந்திரங்களால் அக்னியை அபிமந்திரித்து பஞ்சப்ரம்ம மந்திரங்களால் ஆயிரத்தெட்டு அல்லது நூற்றெட்டாஹூதி செய்து ஆல் அரசு முருக்கு அத்தி இவைகளின் மொட்டுகளை நெய் சேர்ந்த பாலுடனரைத்து அதன் ரசத்தை பத்தினியின் மூக்கில் புத்ரனை யபேக்ஷித்தவர்கள் வலது நாசியிலும் புத்திரியை யபேக்ஷித்தவர் இடது நாசியிலும் பிழிக. அவள் காறியுமிழ்தல் சோகம் ரோகங்கள் நீங்கினவளாயிருத்தல் வேண்டும். வ்யாஹ்ருதி சதுஷ்டயங் கொடுத்து ஓம் ஹாம் இம் ஈம் ஊம் வியோம வ்யாபினே ஓமிதி வ்யோமவ்யாபி தசாக்ஷர மந்திரங்களால் பூர்ணாஹூதி கொடுத்து சர்வ கர்மங்களின் முடிவில் புண்யாஹஞ் செய்து முன்போல் நாந்திமுக ஸ்ராத்தஞ் செய்து அகோர அஸ்திரங்களால் அந்த பஸ்மத்தை திரிபுண்டரமாகத் தரித்து முதலில் சிவத்தை உத்தாபித்து பிறகு அக்கினியை உத்தாபனஞ் செய்க சைவர்களோடு புசிக்க. அவ்விராத்திரியில் ஸ்திரீ புருஷர்கள் பாயசம் புசித்து படுக்கையிலிருந்து புருஷன் சிவரூபமாகவும் மனைவி சக்தி ரூபமாகவும் தியானித்து சம்போகம் செய்க.

**ஆகமத்தில்:**—போகத்தை யுத்தேசியாது புத்ர காமியாய் புருஷன் லிங்கத்தை அழிவில்லாத லிங்க ரூபமாக த்யானித்து யோனி நடுவிற் சேர்க்க.

இவ்வாறு ருதுவான பதினாறு நாள்வரை புத்ரோற்பத்தி காலமாதலால் அதில் முதல் மூன்றுநாள் வர்ஜித்து மற்றத் தினங்களில்

**ஆகமம்:—** இரட்டை நாளில் ஆணும் ஒற்றித்த நாளில் பெண்ணும் உண்டாகும். சுக்கிலம் வ்ருத்தியாயின் ஆணும் ச்ரோணித வ்ருத்தியாயின் பெண்ணும் சுக்ல ச்ரோணித சமமாயின் அலியாகவும் உண்டாகும். கருப்பாசயத்தி லடைந்த விந்துவானது வாயுவாற் கண்டிக்கப்படுமாயின் கருப்ப மிரட்டித்து இரண்டு சரீர முண்டாகும். புன்னை மொக்கினளவாய் கருப்பாசயத்தை யடைந்த விந்துவானது அவ்விடத்திலிருந்து சிறுகச் சிறுக வ்ருத்தி யடைகின்றது. மரணாதி காரியமானது ஈஸ்வரரால் நியமிக்கப்படுகிறது. ஆயுசு விபவம் தொழில் வித்தை மரணம் சுகம் இவ்வாறையு மடைந்து கருப்பாசயத்தில் கருப்பம் வ்ருத்தி யடைகின்றது.

இவ்வாறு முதலாவது ருதுசங்கமனவிதி

முற்றிற்று.

—o—

## இரண்டாவது கருப்பாதானவிதி

**வீரதந்த்ரம்:**— ரோஹிணி, ரேவதி, அஸ்தம், திருவோணம், அநுஷம், சுவாதி, சதயம், மூன்றுத்தரங்கள் என்னும் நக்ஷத்திரங்களும் புதன் குரு வெள்ளி திங்கள் என்னும் வாரங்களும், ஷஷ்டி, அஷ்டமி, அமாவாசை பௌர்ணமி, சதுர்த்தி, சதுர்த்தசி என்னும் திதிகளும் இரண்டு பருவங்களும் நீக்கி மற்றத் திதிகளும் நிஷேகத்திற்குச் சுபமாகும். வாரங்களில் சோமவாரம், குருவாரம், புதவாரங்களே கருப்பாதான ஸ்திரீகட்குக் கொள்ளவேண்டும்.

முதல் மாதத்தில் சரீரவேதை தூக்கம் பர்த்ருத்வேஷம் அருவெறுப்பு கடினமடைந்த நிதம்ப அதிர்ச்சி முதலிய குறிகளால் கருப்ப லக்ஷணத்தை யறிந்து சுப நக்ஷத்திரத்தை யாராய்ந்து ஆசமித்து சகளீகரித்து ப்ராணாயாமஞ் செய்து சாமான்யார்க்யங் கொடுத்து முன்போல் விக்னேஸ்வர பூஜை புண்யாவாசஞ் செய்து முன்போல் அக்னியைப் பூஜித்து சத்யோஜாத மந்திரத்தால் நூற்றெட்டாஹுதி செய்து கோதுமை உளுந்து சேகரித்து பால் தயிர் நெய் கலந்து மூன்று முறை ஈசாநமந்திரத்தால் பத்னியை குடிப்பித்து ஆசமித்து சகளீகரித்து சத்யோஜாத மந்திரத்தால் இருபத்தைந்து முறை ஆஹுதி செய்து புருஷன் தத்புருஷத்தால் பத்னியின் வயிற்றைப் பரிசித்து பூர்ணாஹுதி செய்து பஸ்மவந்தனாதிகள் செய்து முதலிற் சிவத்தை யுத்தாபித்துப் பிறகு அக்கினியை யுத்தாபனஞ் செய்து ஆசாரியரைப் பூசித்துச் சைவர்களுடன் புசிக்க.

இவ்வாறு இரண்டாவது கருப்பாதான விதி முற்றிற்று.

## மூன்ருவது பும்ஸவன விதி

**வீரதந்த்ரம்:**—இரண்டாமாதக் கடைசியில் சர்வாரிஷ்டங்களும் நீங்கும்பொருட்டுச் செய்யத் தக்க பும்ஸவனத்தைப் புத்திமான் பூசம் திருவோணங்களிற் செய்யத்தக்கது. குரு சுக்ர புதன் சந்திரர்களின் உதய இலக்கினம் சிறந்தது. அஷ்டம சுத்தமா யிருத்தல் வேண்டும்.

கருப்பத்தின் ஆரம்பத்திற்கு இரண்டாவது அல்லது நான்காவது மாதத்தில் சுபநக்ஷத்திர யோகங்களை யாராய்ந்து ஆசமித்து சகளீகரணஞ் செய்து ப்ராணயாமஞ் செய்து சாமான்யார்க்யங் கொடுத்து முன் கூறியபடி விக்னேஸ்வர பூஜையுடன் புண்யாஹவாசஞ் செய்து அங்குரார்ப்பண ரக்ஷாபந்தனஞ் செய்து பிறகு முன் கூறியவாறு அக்னியை ஆராதித்து வாமதேவத்தால் ஆயிரத்தெட்டு அல்லது நூருஹுதி செய்து த்ருவ்ருத்தோடு கூடிய கோதுமை உளுநது சேகரித்துப் பால் தயிர் நெய் கலந்து ஈசான மந்திரத்தால் பத்னியைக் குடிப்பித்து ஆசமித்து சகளீகரணஞ் செய்து முன் கூறியபடி நாந்திமுக ஸ்ரார்த்தஞ் செய்து ஆல் அரசு புரசு அத்தி மொட்டுக்களை நெய் கலந்த பாலிலரைத்து புது வஸ்திரத்தால் அக்னியின் மேற்கு பாகத்தில் பத்னியின் மூக்கு த்வாரத்தில் வாமதேவத்தாற் சிவத்தை த்யானித்துப் பிழிக. காறி யுமிழ்தல் முதலிய செய்யலாகாது. செய்யின் ப்ராயச்சித்தத்தின்பொருட்டு அகோரத்தால் இருபத்தைந்தாஹுதி செய்து பூர்ணஹுதி கொடுத்து பஸ்மவந்தநாதிகள் செய்து முதலில் சிவத்தை உத்தாபித்துப் பிறகு அக்னியை உத்தாபனஞ் செய்க. ஆசாரியரைப் பூஜிக்க. இல்லாவிடில் சீமந்தத்

துடன் ஒரே தினத்தில் பும்சவனஞ் செய்க. முடிவில் சைவர்களுடன் புசிக்க.

இவ்வாறு மூன்ருவது பும்சவனவிதி முற்றிற்று.

—o—

## நான்காவது சீமந்த விதி

**வீரதந்த்ரம்:—** சீமந்தத்தைக் கூறுகின்றேன். பிரம் மாவே கேளும். நான்காவது மாதத்தில் அல்லது ஆரு வது மாதத்தில் சீமந்தஞ் செய்யவேண்டும். இல்லா விடில் நான்கு ஆறு எட்டாவது மாதங்களில் சீமந்த கர்மஞ் செய்யவேண்டும். ரோஹிணி பூசம் உத்திரம் புனர்ப்பூசம் அஸ்தம் திருவோணம் ரேவதி மிருகசீர்ஷம் என்னும் நக்ஷத்திரங்களில் சுபாம்ச சுப இலக்கினங்க ளும் சிம்ம வ்ருச்சிகங்களும் எட்டாமிட சுத்தமும் சீமந் தோன்னயனஞ் செய்தற் குறியது.

புண்யாஹவாசஞ் செய்து அக்னியைப் பூஜித்து தந்துரேயிரம் என்னும் மநுவால் பதினைந்தாஹுதி செய்து அகோர மந்திரத்தால் நூற்றெட்டாஹுதி செய்க. ராகாமஹேதி மந்திரத்தால் முள்ளம்பன்றி முட்களால் மயிரை வகிர்தல் செய்க. தர்ப்பை நுனி யால் யாத்ரே ராத்ரே சுமதயோ என வகிர்தல் செய்க. அத்திக் கொம்பால் சிநீவாலி மந்திரத்தைக் கூறி வகிர் தல் செய்க. கோதுமையால் குஹூர்தயே என்னும் மந்திரத்தைக் கூறி வகிர்தல் செய்க. தர்ப்பையால் மீட் டும் யவோசி யவயாஸ்மேதி என்னும் மந்திரத்தைக்கூறி அளகத்தை வகிர்தல் செய்க. சோமோ ராஜேதி என் னும் மந்திரத்தால் ஸ்திரீகள் வீணைகானஞ் செய்தல்

வேண்டும். தேவர்களே! மற்ற விஷயங்கள் பும்ஸவனத்திற் கூறியபடி செய்யத்தக்கது.

இல்லாவிடில் சிம்ம விருச்சிக நீங்கிய ராசிகளும் சதுர்த்தி சதுர்த்தசி பௌர்ணமி அமாவாசை நீங்கிய திதிகளும் சத்கர்மமான சீமந்தோன்னயனத்திற்கு சிரேஷ்டமாகும்.

ப்ரதம கருப்பத்தில் பும்ஸவன சீமந்தாதிகள் முக்கியமாகும். இரண்டாவது முதலிய கருப்பங்கட்கு நீக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது.

கர்ப்பஸ்திரீகட்கு ப்ரஜாவிருத்தியின் பொருட்டு சீமந்த புத்ர சம்ஸ்காரம் இவ்வாறு செய்க. அதனல் ப்ரதம கருப்பத்திற்கே சீமந்த கர்மஞ் செய்தல் வேண்டும். ஒரு முறை சீமந்த சம்ஸ்காரஞ் செய்த ப்ராம்மண ஸ்திரீகள் கருப்பங்களின் ப்ரசவங்கள்தோறும் சம்ஸ்காரஞ் செய்தவர்களாவார்கள்.

பிறகு ஆசமித்து சகளீகரணஞ் செய்து ப்ராணயாமஞ் செய்து சாமான்யார்க்கியங் கொடுத்து முன் கூறியவாறு விக்னேஸ்வர பூஜை செய்து புண்யாஹ அங்குரார்ப்பண ரக்ஷாபந்தனஞ் செய்து அக்னியைப் பூஜித்து அகோரமந்திரத்தால் நூற்றெட்டாஹுதி செய்து முன்கூறியவாறு நவக்கிரஹ ஹோமஞ் செய்து ஹ்ருதயாதிகளால் நான்காஹுதி செய்து பிறகு முள்ளம்பன்றி மயிரால் முன் நெற்றியிலிருந்து சிரசின் நடுவிரை ஓம் ஹாம் பரமேஸ்வராய ப்ரஹ்மணே ஹ்ருதயாய நம: என்றெழுதி தர்ப்பாங்குரத்தால் ஓம் ஹாம் சர்வ யோகாதி க்ருதாய வித்யாதிபாய சிரஸே ஸ்வாஹா

என்றெழுதி அத்திக் குச்சால் ஓம் ஹாம் ருத்ராண்யை சிகாயை வௌஷட் என்றெழுதி யவாங்குரத்தால் ஓம் ஹாம் க்ரோப்த்ரே புருஷாய கவசாய ஹூம் என்றெழுதி பிறகு முள்ளம்பன்றி மயிர் தர்ப்பை அத்தி யவாங்குரங்களை தர்ப்பையால் கட்டி ஓம் ஹாம் தேஜஸ்தேஜ சித்ரூபாய நேத்ரத்ரயாய ஹூம்பண்ணம: என்றெழுதி பிறகு யவாங்குரத்தால் ஓம் ஹாம் ப்ரதம ப்ரதம பாசுபதாஸ்த்ராய அஸ்த்ராய ஹூம்படு என்று பத்தினியின் சிரத்தில் வைத்து அக்காலத்தில் நூதன வஸ்திரங்கொடுத்து பொன்னாபரணம் புஷ்பமாலை சந்தனங்களாலலங்கரித்து கோதுமை உளுந்து சேகரித்து பால் தயிர் நெய் கலந்து மும்முறை ஈசமந்திரத்தால் குடிப்பித்து ஆசமித்து சகளீகரித்து அக்காலத்தில் முன் கூறியவாறு நாந்திமுக ஸ்ராத்தஞ் செய்து தத்புருஷத்தால் வயிற்றைத் தொட்டு சிவமந்திரஞ் ஜபித்து தம்பதிகள் அறுகு அக்ஷதைக் கலந்து முழங்கால் தொப்புள் மார்பு நெற்றி சிரசு என்னுமிடங்களில் கைகளால் சத்யோஜாதாதி ஈசமந்திரங்களாலிறைத்து பூர்ணாஹூதி கொடுத்து பஸ்ம வந்தனஞ் செய்து முதலில் சிவத்தை உத்தாபித்து பிறகு அக்கினியை உததாபிக்க.

பிறகு பத்து வராகனிடைப் பொன் அல்லது வெள்ளியால் வாழைப்பூவின் தளம்போற் ப்ரதிமைச் செய்து மஞ்சள் ஜலத்தால் சிகாமந்திரத்தால் பத்தினியின் முதுகில் விடுக. ஆசாரியரைப் பூஜித்து பந்துக்களுடன் பொஜனஞ் செய்க.

இவ்வாறு நான்காவது சீமந்தவிதி முற்றிற்று.

—o—

## ஜாதகர்ம விதி

சர்வாபீஷ்ட சித்தியின் பொருட்டு ஜாதகர்மவிதியைக் கூறுகின்றேன். பிறந்த குமாரனை ஹ்ருதய மந்திரங் கூறித் தரிசித்தல் வேண்டும். அஸ்திரத்தால் நாபியின் கொடியை யறுத்தல் வேண்டும். பூத மந்திரத்தால் விதிப்படி ஜலத்தைக் கொண்டு ஸ்நானஞ் செய்வித்தல் வேண்டும். பிதா அங்காதங்காத் என்னு மநுவைக் கூறி உச்சியை மோத்தல் வேண்டும். ஈசானுத் என்னும் மநுவைக் கூறி உச்சி மோத்தல் வேண்டும். பிறகு வலது காதில் தத்புருஷ மந்திரத்தை ஜபித்தல் வேண்டும். தெய்வத்தன்மையுடைய அஸ்மாத பரகர்பவ என்னும் மநுவைக் காதில் ஜபித்தல் வேண்டும். அக்னிமாயுஷ்ய மநுவால் நக்ஷத்திர நாமத்தைக் கூறல்வேண்டும். பொன்னோடு கூடிய நெய்யைத் தொட்டு மீட்டும் வ்யாக்ருதி மநுவால் விதிப்படி ஸ்நானஞ் செய்விக்க. ஆயுராரோக்கியமே தாவி ஸ்ரீதேவி என்னும் மநுவால் மாதாவின் கையிற் கொடுத்திருக்கச் செய்து ஜபித்தல் வேண்டும். யஸ்தேஸ்தனே என்னும் மநுவால் மாதாவினிடத்து ஸ்தனத்தின் பாலைக் கொடுத்தல் வேண்டும். பூர்ணேதக் கும்பாக்நௌஸ்தே என்னும் மனுவால் சிரத்தில் நியசித்தல் வேண்டும். ஆலத்துடன் கலசத்தை ஸ்தாபித்து அக்னி முகத்தைக் கற்பிக்ஷ வேண்டும். ஆபஸ்ஸுப்தே என்னும் மநுவால் பக்குவமான ஆஹுதியைக் கொடுத்தல் வேண்டும். ஹரிஹர நாமத்தை யுச்சரித்து நெய்யாஹுதி செய்து புருஷேண என்னும் மநுவால் நூற்றெட்டாஹுதி செய்க. உடனே இஷ்டாபீஷ்டத்தைத் தருவதின் பொருட்டு அரசிலையோடு

கூடிய ஓமத்தின் மிகுதியை பலியிடுக. நம ஆவ்யாதி நீப்ய: என்னும் மநுவால் வெண்கடுகை ஓமஞ் செய்க.

இல்லாவிடில் முதலில் பிரசவ வீட்டைப் பார்த்து ஹ்ருதய மநுவால் எள்ளு வெண்கடுகுகளின் சூர்ணத்தால் தூபமிட்டு அவ்விடத்தில் பிரசவ மாது அவளுக்குத் துணையானவள் மருத்துவமாது என்னும் மூவருடன் பிரவேசித்து குமாரன் பிறந்தவுடன் பிதா ஸ்னானஞ் செய்து அவ்விடமடைந்து ஆசமித்து சகளீகரித்து பிராணாயாமஞ் செய்து சாமான்யார்க்யங் கொடுத்து முன் கூறியவாறு விக்னேஸ்வர பூஜை செய்து புண்யாஹவாசனம் அங்குரார்ப்பணம் ரக்ஷாபந்தனஞ் செய்து அக்னியை யுண்டாக்கி சகலமும் ரக்ஷித்ததற்கு அஸ்த்ர மநுவால் நூறாஹுதி செய்து சிவத்தைத் தியானித்து வாம மநுவால் புத்திரன் முகத்தைப் பார்த்து நாபிக் கொடியை அஸ்திரத்தாற் சேதித்து அங்க மநுவால் அங்கத்தைச் சுத்தி செய்து பஞ்ச ப்ரம்மத்தை யுச்சரித்துப் புத்திரனுச்சியை மோந்து அதன் வலது கர்தில் தத்புருஷ மநுவை ஜபித்து தேன் நெய் வெல்லம் கலந்து! ப்ரம்ம முடியோடு கூடிய பொன் சேர்ந்த தர்ப்பக் கட்டால் பத்தினியை ஹ்ருதய மநுவாற் குடிப்பித்து ஆசமித்து சகளீகரணஞ் செய்து ஹ்ருதய மநுவால் ஜல பூர்ணகும்பத்தைப் பூஜித்துக் குழந்தையின் ரக்ஷையின் பொருட்டு சிரசில் வைத்து பூர்ணாஹுதி கொடுத்து பஸ்ம வந்தனஞ் செய்து சிவத்தை உத்தாபனஞ் செய்து அக்காலத்தில் சைவர்கட்கும் அன்னியர்கட்கும் பசு பூமி எள்ளு பொன் தான்யம் முதலியவைகளைக் கொடுத்தல் வேண்டும்.

பின் உதய சாயந்திரங்களில் பத்து இராத்திரி அக்கினியை வளர்த்தி அஸ்திரத்தால் ரக்ஷையின் பொருட்டு நூருஹுதி செய்க. மூன்று ஐந்து ஏழாவது நாட்களில் சயனங்களைச் சுத்தி செய்க.

நித்யம் ஆவசுப்தே என்னும் மநுவால் பதினைந்தாஹுதி செய்து ஹரிஹர மந்திரங்களை யுச்சரித்து நெய்யாஹுதி கொடுத்து வெண்கடுகால் ஹ்ருதயத்தால் ஓமஞ் செய்து தத்புருஷ மநுவால் நூற்றெட்டாஹுதி செய்க.

இல்லாவிடில் சூதக முடிவில் சுப லக்கினுதிகளிற் செய்க.

## கர்ணவேதனம்

கர்ணவேதனத்தைக் கூறுகின்றேன் :—

முகத்தி னலங்காரத்தின் பொருட்டு பத்து பன்னிரண்டு பதினுரும் நாட்களில் கர்ணவேதனம் செய்க.

**ஸ்மிருதிசாரம்:**—புத்திரன் உற்பவித்த காலத்தின் இராசி சக்கரத்தில் சூரியன் சுகஸ்தானத்திலும் ராகு தரிசன ஸ்தானத்திலும் இருத்தல் வேண்டும். க்ரஹணம் கல்யாணம் சங்கிராந்தி யாத்திரை ஸ்திரீ ப்ரசவம் நைமித்திக ஸ்னனம் யஞ்ஞம் இவைகளின் கிரியைகள் இராத்திரியிலும் தூஷிக்கப்படாது. எதுவரை தொப்புளின் கொடி சேதிக்கப்படவில்லையோ அதுவரை சூதகமில்லை. தொப்புளின் கொடி சேதித்தவுடன் சூதகமுண்டாகிறது.

ஐந்தாவது ஜாதகர்மவிதி முற்றிற்று.

## ஆறுவது உத்தாபன கர்மவிதி

பிறகு உத்தாபனவிதி கூறப்படுகிறது. பத்து பன்னிரண்டு முப்பது முப்பத்திரண்டு. இதற்கு மேற்பட்ட தினங்களில் உத்தாபனஞ் செய்க.

அவ்விராத்திரியிலுள்ள சகல திரவிய பாண்டங்களையும் விலக்கி வெண்கலம் மரம் இரும்பு முதலானவைகளை மனதாற் சுத்தி செய்து வண்ணானால் வஸ்திரங்களைச் சுத்தி செய்து பஸ்மத்தால் பொன்னைச் சுத்தி செய்து ஜலங் கலந்த மண் கோமயங்களால் வீட்டைச் சுத்தி செய்து தீட்டு நீங்கும்படி கர்த்தா ஸ்நானஞ் செய்து பிறகு க்ஷௌரகர்மஞ் செய்து கொள்க.

**ஸ்திரீகளுக்கு விசேஷ விதி:—** ஸ்நானஞ் செய்த பின் அக்கினி காரியஞ் செய்து புதுப் பாண்டங்களைச் சோதித்து ஹ்ருதயத்தாற் பஞ்சகவ்யத்தைக் குடித்து ஆசமித்து சகளீகரணஞ் செய்து ப்ராணாயாமஞ் செய்து சாமான்யார்க்யங் கொடுத்து முன்போல் விக்நேஸ்வர பூஜை சங்கற்பித்து புண்யாஹ அங்குரார்ப்பண ரக்ஷா பந்தனங்களைச் செய்து அக்கினி முகத்தை யுண்டாக்கும் வழியில் அக்கினி காரியஞ் செய்து ப்ராயச்சித்தத்தின் பொருட்டு அகோரத்தால் நூற்றெட்டாஹுதி செய்து ஒரு மண் மடக்கில் தர்ப்பை சேர்ந்த ஜலத்தை சிவமந்திரத்தால் அபிமந்திரித்து சிவமயமான அந்த ஜலத்தை தம்பதிகள் குடிக்க.

பிறகு பூர்ணாஹுதி கொடுத்து பஸ்ம வந்தனஞ் செய்து முதலில் சிவத்தை உத்தாபித்து பிறகு அக்கினியை உத்தாபனஞ் செய்க. ஆசாரிய பூஜை செய்து பந்துக்களுடன் புசிக்க.

ஆறுவது உத்தாபன கர்மவிதி முற்றிற்று.

## ஏழாவது நாமகரண விதி

**வீரதந்த்ரம்:**—பிரம்மாவே நாமகரணத்தைக் கூறுகிறேன், கேளும் உத்திரம், ரேவதி, அஸ்தம், சதயம், மூலம், பூசம், புனர்ப்பூசம், திருவோணம், ஸ்வாதி, ரோஹிணி, மிருகசீர்ஷம் இந்நக்ஷத்திரங்கள் நாமகரணத்திற் குபயோகமானவை.

உத்தமதேசிகர் விதிப்படி அக்கினி முகத்தை யுண்டாக்கி சிவதத்துவத்தைப் பூஜித்து நாமகரணத்தின் பொருட்டு ஹோமஞ் செய்க. சிவ முடிவான இரட்டை எழுத்துக்களையுடைய ருஷிகளை ஸ்வஸ்திவாசனத்திற் பூஜித்து மார்கழியில் சங்கரநாமமும் தையில் சம்பு மாசியில் மஹேஸ்வரம் பங்குனியில் மஹாதேவம் சித்திரையில் ஸ்தாணு வைசாகத்தில் சிவம் ஆனியில் பசுபதி ஆடியில் உக்ரம் ஆவணியில் ஷண்முகநாமம் புரட்டாசியில் த்ரியம்பகம் ஐப்பசியில் ஈஸ்வரன் கார்த்திகையில் ருத்ரம் என்னும் நாமங்களும் சிரேஷ்டமான நாமங்களும் குருவின் நாமங்களும் பிதுர்நாமங்களுமாகும். நாமகரணஞ் செய்தல் யாகஞ் செய்ததற் கொப்பாகும். இவ்வாறு முன்சொன்ன நக்ஷத்திரங்கள் நாமகரணத்திற்குச் சிரேஷ்டமாகக் கூறப்படுகிறது.

**காலோத்தரம்:**—பத்தாநாள் அல்லது பன்னிரண்டாம் நாளிலாவது நாமகரணஞ் செய்தல் வேண்டும். சூணமான புண்ய திதி முஹூர்த்த நக்ஷத்திரங்களில் பதினோராநாள் பன்னிரண்டாம் நாட்களில் தர்மமாக நாமகரணஞ் செய்தல் வேண்டும்.

பதினோராம் நாள் முதல் சூதகம் முடியும் வரையில் அனுகூல தினங்களிற் சுத்தியாக ஸ்நானஞ் செய்து

ஆசமித்து சகளீகரித்து ப்ராணயாமஞ் செய்து முன் சொன்னபடி விக்னேஸ்வர பூஜை புண்யாவாஹஞ் செய்து சிவகும்பம் ஸ்தாபித்து அக்கினியை யுண்டாக்கி பூர்ணாஹுதி கொடுத்து சிவமந்திரத்தால் நூற்றெட்டாஹுதி செய்து குமாரன் சிரசில் தூர்வாக்ஷதையை ஹ்ருதயத்தால் தெளித்து கோதுமை உளுந்துகளைச் சேகரித்து மும்முறை ஈசமந்திரத்தா லாஹுதி செய்து சிவஹஸ்தங் காட்டி புத்திரனைத் தொடல் வேண்டும். ஸ்திரீயாகில் ஹோம மன்னியில் சிவஹஸ்தங் காட்டுக.

புத்திரனாகில் முதல் மஹாதேவம் இரண்டு மஹேஸ்வரம் மூன்று சங்கரம் நான்கு வ்ருஷப த்வஜம் ஐந்து சூலபாணி ஆறு காமாரி ஏழு தேவதேவேசம் எட்டு ஸ்ரீகண்டம் ஒன்பது ஈஸ்வரம் பத்து பார்வதி ப்ரியர் பதினொன்று ருத்ரம் பன்னிரண்டு சிவம் என்னும் பன்னிரண்டு நாமங்களில் ஒன்றை யிட்டு பிறகு சிவாதி தேவாந்தம் க்ருத்திகாதி நக்ஷத்திர நாமங்களால் ஹ்ருதயம் நெற்றி சிரசுகளில் சத்யோஜாதாதி மந்திரங்களாலிரைக்க.

இல்லாவிடில் முன்சொன்னபடி பன்னிரண்டு மாத நாமங்களால் புத்திரனுக்கு நாமகரணஞ் செய்க.

**ஆகமங்களில்:—** இல்லாவிடில் தேவேந்திரனே! குருநாமத்தையாவது பக்தியுடன் வைத்தல் வேண்டும். ஸ்திரீயாகில் சக்தி மந்திர நாமங்களை யுச்சரித்திரைக்க.

கன்னிகைக்கு அம்பிகா, பார்வதி, கௌரி. பவானி, சுரார்ச்சிதை, தாக்ஷாயணி, ஹைமவதி, மஹாதேவி, ஹாப்ரியை, உமை, சிவங்கரி, கிரிஜை என்னும் சக்தியின் பன்னிரண்டு நாமங்கள் குருநாமம் நக்ஷத்திர நாமங்களைச் சேர்த்து உச்சரிக்க.

பிறகு முன்போல் நாந்திமுக ஸ்ராத்தஞ் செய்து புண்யாஹவாசனஞ் செய்து பஸ்மவந்தனஞ் செய்து முதலில் சிவத்வை யுத்வாசித்து பிறகு அக்கினிஸய உத்வாசனஞ் செய்க. ஆசாரிய பூஜை செய்து பிறகு சைவரைப் பூஜிக்க. பிறகு பந்துக்களுடன் போஜனம் செய்க.

ஏழாவது நாமகரணவிதி முற்றிற்று.

—o—

## எட்டாவது உபநிஷ்க்ரமண விதி

**வீரதந்த்ரம்:**—நான்காம் மாதத்திற் செய்ய வேண்டிய உபநிஷ்க்ரமணவிதி கூறுகின்றேன்: அஸ்வனி, ம்ருகசீர்ஷம், ரேவதி, புனர்ப்பூசம், திருவோணம், அவிட்டம், அஸ்தம், ஸ்வாதி, அநுஷம், சித்திரை, உத்தரம், சதயம் ரோஹிணி பூசநக்ஷத்திரங்கள் உபநிஷ்க்ரமணத்திற்குச் சிறந்தவை.

பத்தாமிடம் சுத்தமா யிருத்தல் வேண்டும்.

மங்களகரமான சுபமுகூர்த்தத்தில் அக்கினி முகத்தை யுண்டாக்குக. ஈசான மந்திரத்தால் ஸ்வஸ்தியின் பொருட்டு ஓமஞ் செய்க. வெளியில் பசுவின் தோலளவு கோமயத்தால் மெழுகி மணலால் மேடை செய்து அரசு ஸ்தாபித்து ருத்ராதித்யாய என்னும் மநுவால் சூரியனை அர்ச்சித்து சுபமுஹூர்த்த சுபலக்கினத்தில் தாயுடன் குழந்தையை வெளியே கொண்டுவந்து ப்ராம்மணர்களுடன் ஆசீர்வாதஞ் செய்து ஸ்வக்ரஹத்திற் சேரும்படி விதிக்கப்படுகிறது.

இல்லாவிடில் நான்காமாதத்தில் சுபமுகூர்த்தத்தில் மனத்திற்கு இஷ்டமான தினத்தில் சுத்தியாக ஸ்னைஞ் செய்து ஆசமித்து சகளீகரணஞ் செய்து ப்ராணாயாமஞ்

செய்து சாமான்யார்க்யங் கொடுத்து முன் கூறியவாறு விக்னேஸ்வரபூஜை சங்கற்பித்து புண்யாஹ அங்குரார்ப்பண ரக்ஷாபந்தனங்கள் செய்து அக்கினியை யுண்டாக்கி பிதா புத்ரனை யலங்கரித்து தத்புருஷத்தால் புத்திரன் சிரசை மோந்து முன் கூறியவாறு நாந்திமுக ஸ்ராத்தஞ் செய்து க்ரஹத்தின் வெளியில் பசுவின் தோலளவு கோமயத்தால் மெழுகி அதன்மேல் ஓடு மயிர் புழு முதலியவை யில்லாத மணலால் மேடை செய்து அதன் மேல் அரசிலை யமைத்து அதன் மேல் ருத்ராதித்யாய என்னுமநுவால் ஆசனஞ் செய்து ஓம் ஹாம் ருத்ராதித்யாய மூர்த்தயே நம: என்று மூர்த்தியை ந்யாசித்து ஓம் ஹாம் ருத்ராதித்யாய நம: என்று ஆவாஹித்து புஷ்பாஞ்சலி முதலிய எட்டு சம்ஸ்காரங்களாற் பூஜித்து தூபதீப நைவேத்திய பானீய தாம்பூலாதிகளைக் கொடுத்து அதன் சன்னதியில் சிசுவை ரக்ஷிக்கும்படி விஞ்ஞாபித்து நல்ல முகூர்த்தலக்கினத்தில் அம்மான் சிசுவை யெடுத்து வெளியே கொணர்ந்து சிவகோஷஞ் செய்து சங்ககாஹள முதலிய வாத்தியங்கள்செய்து பின்னல் பிதா பந்துக்களுடன் ஸ்வஸதிமந்திரங்கூறி மெள்ளமெள்ள தேவலாயமடைந்து விருஷபத்தின் பின் புறத்தில் நின்று

ஓம் தீக்ஷ்ண ச்ருங்காய வித்மஹே வேதபாதாய தீமஹி தன்னோ வ்ருஷ ப்ரசோதயாத்

என்னும் வ்ருஷப காயத்ரி மந்திரத்தால் விருஷபத்தை நமஸ்கரித்து தேவதேவிகளை நமஸ்கரித்து வீட்டையடைந்து முன்போல் வீட்டைப் பூஜித்து நமஸ்கரித்து சிசுவை ரக்ஷிக்கும்பொருட்டு விஞ்ஞாபித்து

மெள்ளமெள்ள கிரஹத்தை யடைந்து ஆதித்தனை யர்ச்சித்து உத்தாபனஞ் செய்து பிறகு ப்ராயச் சித்தத் தின் பொருட்டு அகோரத்தால் நூற்றெட்டா ஹுதி செய்து பூர்ணாஹுதி கொடுத்து பஸ்மவந்தனஞ் செய்து முதலில் சிவத்தை உத்தாபித்து பிறகு அக்கினியை உத்தாபனஞ் செய்க. ஆசாரிய பூஜை செய்து பந்துக் களுடன் போஜனஞ் செய்க.

**பிரஹஸ்பதி :**—உபநிஷ்க்ராமண மென்பது வீட்டி லிருந்து முதலில் வெளியே போவது. அவ்வாறந்தக் கிரியையைச் செய்யாவிடில் சிசுவிற்கு சம்பத்து ஆயுசு முதலியவை நாசமடையும். கிரியையை விதிப்படிச் செய்யின் சம்பத்து ஆயுசு முதலிய வ்ருத்தியடையும். மூன்றுமாதத்தில் சிசுவிற்கு சூரியனைக் காட்டுதல் வேண்டும். நான்கா மாதத்தில் சந்திரனை தரிசிப்பித்தல் வேண்டும்.

**காலதீபம் :**—உபநிஷ்க்ரமணம் நான்காமாதத்தில் அன்னப்ராசன விதிபோற் செய்தல்வேண்டும். அல்லா விடில் அன்னப்ராசன காலத்திலாவது நிஷ்க்ரமணக் கிரியைச் செய்தல்வேண்டும்.

எட்டாவது உபநிஷ்க்ரமணவிதி

முற்றிற்று.

—o—

## ஒன்பதாவது அன்னப்ராசனவிதி

**வீரதந்த்ரம் :—** தபோதனர்களே? பிறகு அன்ன ப்ராசன விதி கூறுகிறேன். ஆறு எட்டு என்னு மாதங் களில் அன்னப்ராசனம் ஆரம்பித்தல் வேண்டும்.

அச்வனி மிருகசீருஷம் சதயம் ரோஹிணி பூசம் என்னு நக்ஷத்ரங்கள் அன்னப்ராசனத்திற்கு ச்ரேஷ்ட மானவை. பத்தாமிடம் சுத்தமாயிருத்தல்வேண்டும் முதலில் இரண்டு நாந்திமுக ப்ராமணர்களை போஜனஞ் செய்வித்து புஷ்பகந்தங்களால் விசேஷமாக அலங் கரித்து வீட்டிற்குள் சகுன சூக்தங்களை யுச்சரித்து வீட்டைப் பூஜித்து அஸ்திரத்தால் சோதித்தல் வேண்டும். பிறகு பிதா தத்புருஷத்தை யுச்சரித்து ஆசிரமத்தை யடைதல் வேண்டும். அக்கினி முகத்தைச் சங்கற்பித்து அன்ன சூக்தத்தோடும் பஞ்ச ப்ரம்மங்க ளோடும் ஹோமஞ் செய்து அஹமஸ்மீதி மந்திரத்தால் தயிர் நெய் தேன் கலந்து ஹோமஞ் செய்தல் வேண்டும். யாஜாதா ஒஷதயயிதி யந்மதுனோ மதவ்யம் என்னு மந்திர முச்சரித்து நல்லமுகூர்த்த லக்சினங்களில், பாயசத்தைப் புசிப்பித்தல் வேண்டும். அவ்விடத்தில் ப்ராம்மணர்களைப் புசிப்பித்து ஆசாரியரைப் பிறகு பூஜித்தல் வேண்டும்-

**அல்லாவிடில் சுப்ரபேதம் :—** ஆறுமாதம் சுபதின நக்ஷத்ரத்தில் உச்சிஷ்ட ஸ்பர்சமில்லாத பாலனுக்கு அன்னப்ராசன கர்மஞ் செய்தல் வேண்டும்.

அவ்வாறே ப்ரஹஸ்பதி விசேஷமாகக் கூறுகிறார். அன்னப்ராசனமானது ஆறு எட்டு பத்து பதினோன்றி பன்னிரண்டு என்னும் ஸௌரமாதங்களில் செய்தல்

வேண்டும். அல்லாவிடில் இரட்டை மாதங்களில் செய்க வென்று ப்ரஹஸ்பதியாற் கூறப்படுகிறது.

**வீரதந்த்ரம்** :—மாதவிதிகளாகச் செய்யவேண்டிய இந்தக் காரியங்களில் குரு சுக்ர மூடதோஷ முண்டாகாது. அதுபோல் மாசலக்ஷணபலங்களையும் கவனிக்கத் தக்கதன்று. அவ்வாறே நவமி ஷஷ்டி பக்ஷசித்ரங்கள் இவைகளை ப்ரயத்னத்துடன் நீக்கி மற்றந் திதிகள் அன்னப்ராசனத்திற்குச் சுபமாகும். சுபக்கிரஹ த்ரேக்காணவார முதலானவை நன்மையாகும். புத சுக்ர குருவாரங்கள் பாலர்களின் அன்னப்ராசனத்திற்குச் சுபமாகும். மற்ற மூன்றுவாரமு நீங்கலாக சோம வாரமும் ச்ரேஷ்டமாகும். பாநு அங்காரக சனிவாரங்கள் சுபமாகும்.

வாராதிபதி உச்ச மித்ர ஸ்வக்ஷேத்ரராகவும் பலிஷ்டராகவும் பலிஷ்டரான குருவால் பார்க்கப்பட்டதாகவு முடைய லக்கினம் சுபமாகும்.

எவ்வாறென்னில் ஸ்னானஞ் செய்து ஆசமித்து சகளீகரித்து ப்ராணாயாமஞ் செய்து சாமான்யார்க்யங் கொடுத்து சிவப்பிராம்மணர்கட்கு போஜனஞ் செய்வித்து முன்சொன்னவாறு நாந்திமுக ஸ்ராத்தஞ் செய்து விக்னேஸ்வர பூஜை சங்கற்பித்து புண்யாஹம் அக்கினி காரியஞ்செய்து முன்சொன்னபடி க்ரஹத்தைப் பூஜித்து சிசுரக்ஷையின் பொருட்டு விஞ்ஞாபித்து பிறகுபுத்திரனை ஆபரணகந்தாதிகளா லலங்கரித்து நெய்கலந்த பாயசத்துடன் பக்குவமான அன்னம் சேகரித்து சிவப்ரம்மாங்க மந்திரங்களால் தனியே நூறாகுதி செய்து பாயசத்தால் சிவமந்திரங் கூறி நூறாகுதி செய்து அக்கினிக்கு எதிராக

பாலனை தீட்டின்றி சுத்தி செய்து சிவமந்திர பீஜ முச்சரித்து முக்கியமான முஹூர்த்த சுபலக்கினத்தில் பாயசம் புசிப்பித்து பூர்ணாஹுதி கொடுத்து பஸ்மவந்தனஞ் செய்து முதலில் சிவத்தை உத்தாபித்து பிறகு அக்கினியை உத்தாபனஞ் செய்க. ஸ்திரீயாகில் ஓமமின்றி மற்றக் கருமங்கள் செய்க. ஆசாரியாரைப் பூஜித்து பந்துக்களுடன் பாயசப் புசிக்க.

ஒன்பதாவது அன்னப்ராசனவிதி.

முற்றிற்று.

—o—

## பத்தாவது பிண்டவர்த்தனம்.

பிறகு ஸ்னைஞ் செய்து ஆசமித்து சகளீகரித்து சாமான்யார்க்யங் கொடுத்து முன்சொன்னபடி விக்னேஸ்வர பூஜை செய்து புண்யாஹவாசனஞ் செய்து முன்போல அக்கினியைப் பூஜித்து பஞ்சப்ரம்ம சிரசால் நூற்றெட்டாஹுதி செய்து புத்திரன் வலது பெருவிரல் ஆரம்பித்து ஈசான முதலிய மந்திரங்களை ஜபித்து கண்களில் வ்யோமவ்யாபி தசாக்ஷரிமந்திரங்களைச் சொல்லி தேன் ஜலம் நெய் பால் கலந்து மதுபர்க்கங் கொடுத்து பூர்ணாஹுதி கொடுத்து பஸ்மவந்தனஞ் செய்து முதலில் சிவத்தை உத்தாபனஞ் செய்து பிறகு அக்கினியை உத்தாபனஞ் செய்க. ஆசாரியரைப் பூஜித்து பந்துக்களுடன் புசிக்க.

பத்தாவது, பிண்டவர்த்தனவிதி.

முற்றிற்று.

## பதிஞேராவது, க்ஷௌரகர்மவிதி.

ஆயுராரோக்யத்தின் பொருட்டு க்ஷௌரகர்மவிதியைக் கூறுகிறேன். மூன்ருவது வயதில் சித்திரை திருவோணம் ஹஸ்தம ரேவதி அவிட்டம் பூசம் புனர்ப்பூசம் ம்ருகசீர்ஷம் என்னும் சுபநக்ஷத்ரங்களில் அஷ்டமசுத்தமாக இருத்தல் வேண்டும் புண்யாவாசஞ் செய்து ப்ராம்மணர்களைப் புசிப்பித்து ஹ்ருதயத்தால் அக்கினியைப் பூஜித்து நெய்யால் ஈசான மந்திரத்தால் ஐம்பதாஹூதி செய்து குமாரனது இடது பாகத்தில் மாதாவின் கையில் மடக்கில் அக்ஷதையுடன் பசுஞ்சாணம் வைத்து மிதமான வெந்நீருடன் ஆப உந்தந்து ஜீவஸே என்னு மந்திரம் சொல்லி தலைமுடியை நனைத்து தர்ப்பையால் ப்ரோக்ஷித்து ஆசாரியர் முதலில் க்ஷவரஞ் செய்து பிறகு நாவிதனால் க்ஷௌரம் செய்விக்க. மத்தியில் குடுமிவைத்து பசுவிற் கெதிர்முகமாதல் தர்ப்பம் அத்திமரம் இவைகளி னடியிலாதல் மயிர்கழிக்க. பிறகு குழந்தையை ஸ்னனஞ் செய்வித்து ஸ்வஸ்தி வாசகத்துடன் ஹ்ருதயத்தாற் ப்ரோக்ஷித்து ஆசாரியருக்கு தக்ஷிணை கொடுக்க.

அல்லாவிடில் பண்டிதர்கள் பிறந்த மூன்ரும் வருஷம் சிறந்ததாகக் சொல்லுவர். ஐந்தாவது ஏழாவது வருஷம் மத்தியம மென்பர். ஒன்பது பதினென்று அதமமாகச் சொல்லுவர்.

**காலநிர்ணயம் :—** க்ஷௌரகர்மம் சொல்லுகிருர் சிசுக்களின் சூடாகர்ம காலத்தில் மாதாகர்ப்பிணியாயின் அந்த கர்ப்பம் க்ஷீணிப்பதுடன் மாத்ரு பித்ருக்களும் துன்பப்படுவர்.

**அவ்வாறே சங்கர் கூறுகிறுர் :—**புத்ரன் சூடாகர்ம காலத்தில் மாதா கர்ப்பிணியாயின் புத்ரஹானியுண் டாகும். அவ்வாறே மாதாவிற்காவதுண்டாகும். ஆத லால் மாதா கர்ப்பிணிகாலத்தில் சூடாகர்மஞ் செய்தல் கூடாது. சிசுவின் ஐந்தாம் வருஷம் வரை இவ்வாறு செய்தல் கூடாது. அதற்குமேல் கர்ப்பிணியாயின் சூடாகர்மஞ் செய்யலாம்.

அல்லாவிடில் ஐந்தாம் வருஷத்திற்கு மேல் கருப்பத் திற்கு தோஷமுண்டாகாது.

**பிருகுவால் விசேஷமாக கூறப்படுகிறது :—**மாதா கருப்பிணியாயின் புத்திரனுக்கு சூடாகர்மஞ் செய்தல் கூடாது. காலாதிக்ரமமாயின் க்ஷௌரஞ் செய்தலால் தோஷமுண்டாகாது.

மூன்ரும் வருஷத்தில் உத்தராயணத்தில் திதிவார நக்ஷத்ர யோககரணங்களைப் பரிக்ஷித்து அன்றைக்கு முன்னுள் முன் சொன்னவாறு விக்னேஸ்வர பூஜை புண் யாஹம் அங்குரார்ப்பணம் நாந்திமுக சிரார்த்தங்களைச் செய்து அஸ்த்ரமந்திரத்தால் பாலனை ப்ரோக்ஷித்து முன்சொன்னவாறு ரக்ஷாபந்தனஞ்செய்துமறுநாளுதயம் ஸ்னனஞ் செய்து ஆசமித்து சகளீகரணஞ் செய்து ப்ராணயாமஞ் செய்து முன்போலக்கினியைப் பூஜித்து ருத்ராயஸ்வாஹா என்று நூற்றெட்டாஹுதி செய்து அக்கினியின் கிழக்கே சிசுவை வைத்து கந்தாதிகளா லர்ச்சித்து ஹரஹர சப்தத்தால் கோஷிப்பித்து அறுகு நுனி அக்ஷதை முதலியவற்ருல் தெளித்து நெய்யால் சொன்னவாறு தடவி தர்ப்பையால் மிதமான வென்னீ

ரால் முடியில்தெளித்து அஸ்திரத்தால் கத்தியை அலம்பி கவசத்தால் அவகுண்டனஞ் செய்து அஸ்திரத்தால் தொட்டு பிதா அல்லது ஆசாரியர் புத்திரனுக்கு ஈசானதி சத்யோஜாதமான ப்ரம்ம மந்திரங்களாற் சிரசின் முன்பாக முதல் க்ஷௌரஞ்செய்து பிறகு நாவிதனல் க்ஷௌரஞ் செய்வித்து மாதா சிசுவின் இடது பாகத்தில் கையில் மடக்கில் பசுஞ்சாண மத்தியில் கேசகண்டத்தை வைத்தல் வேண்டும்.

உபநிஷ்க்ரமண பிண்டவர்த்தன க்ஷௌரகர்மங்கள் புத்ரியாகில் ஓமமு மந்திரமுமின்றி செய்தல் வேண்டும்.

பிறகு கங்கண மவிழ்த்து பாலனை ஸ்னனஞ் செய்வித்து வஸ்திர சந்தனம் புஷ்பம் முதலியவைகளாலலங் கரித்து அக்கினியின் முன் உட்கார்ந்து அக்ஷதையாலர்ச் சித்து சிவாஸ்த்ரத்தால் ஆயிரமல்லது நூருஹூதி செய்து பூர்ணஹூதி கொடுத்து பஸ்மவந்தனஞ் செய்து முன் சிவத்தை உத்தாபனஞ் செய்து பிறகு அக்கினியை உத்தாபனஞ் செய்க. பிறகு ஆசாரியருக்குக் கன்றும் பசுவும் கொடுக்க. பிறகு பிதா பசுஞ்சாணி மத்தியில் வைத்த கழிந்த மயிரை தர்ப்பை அத்திமரங்களினடியில் வைத்து ஆசமித்து வீட்டை யடைதல் வேண்டும்.

பதினேருவது, க்ஷௌரகர்மவிதி

முற்றிற்று.

—c—

## பன்னிரண்டாவது, உபநயனவிதி.

ஜநநமான ஐந்து ஆறு ஏழு ஒன்பது பதினறு வருஷங்கட்குள் உபநயனஞ் செய்தல் வேண்டும்.

**வீரதந்த்ரம்** :—பிராமணர்கட்கு கர்பஞ் சேர்ந்த எட்டாவது வயதிலும் அரசர்கட்குப் பதினேராவது வயதிலும், வைச்யர்கட்குப் பன்னிரண்டாவது வயதிலும், வசந்தகாலத்தில் உபநயனஞ் செய்தல் வேண்டும். பதினறுவது வயது வரையிலும் பிராமணர்கட்குச் செய்யலாம்.

உத்தராயணம் வசந்தருது ரோஹிணி அஸ்தம் சித்திரை உத்தரம் அநுஷம் ஸ்வாதி ம்ருகசீர்ஷம் புனர்ப்பூசம் என்னும் சுபநக்ஷத்ரங்களில் பூர்வபக்ஷம் த்விதீயை பஞ்சமி ஷஷ்டி சப்தமி தசமி த்ரயோதசி த்ரிதியை என்னும் சிறந்த திதிகளிற் செய்தல்வேண்டும்.

**வீரதந்த்ரம்** :—விருஷப மிதுன கடக கன்னி தநுர் மீன லக்னங்களும் எட்டாமிடம் சுத்தமும் சிறந்ததாகும்.

திதிவார நக்ஷத்ர யோககரண லக்கின முஹூர்த்தங்கள் பரிக்ஷித்து எட்டாமிடம் சுத்தமாகக் கொள்ளல் வேண்டும். அந்த தினத்திற்கு ஏழு அல்லது மூன்று தினத்திற்கு முன் ஸ்நானஞ் செய்து ஆசமித்து சகளீகரணஞ் செய்து ப்ராணாயாமத்ரயஞ் செய்து சாமான்யார்க்யங் கொடுத்து முன்சொல்லிய விக்னேஸ்வர பூஜை சங்கல்பம் புண்யாஹவாசம் அங்குரார்ப்பணஞ் செய்து சுபநக்ஷத்திரங் கூடியதினத்தில் உபவீதம் கிருஷ்ணாஜினம் தர்ப்பையாற் செய்த அரைஞாண் தண்டம் குல்லாய் அங்கவஸ்திரம் இவைகளை விதிப்படி சம்பாதித்து முன் சொன்னபடி நாந்திமுக சிரார்த்தம் செய்து அக்கினியைப் பூஜித்து சிகை புருவம் விட்டு

க்ஷௌரம் செய்து ஸ்நானம் செய்து முன் கூறியபடி ரக்ஷாபந்தனம் செய்து சர்வாபரணலங்காரத்துடன் சிஷ்யனை காயசித்தியின் பொருட்டு சருப்புசிப்பித்து உபவீதமுதலிய சின்னங்களை வெளியில் ஆசாரியர் தனக்கிடது பக்கத்தில் வைத்து ஹ்ருதய மந்திரத்தால் ப்ரோக்ஷித்து ஆசீர்வாதம் செய்வித்து சிஷ்யனை ஹ்ருதய மந்திரத்தால் அக்னிக்கு வலப்பக்கத்திலுட் காரவைத்து பஞ்ச பிரமங்களாற் ப்ரோக்ஷித்து சிஷ்யனை வடக்கு முகமாகப் பார்க்கச் செய்து அக்ஷதாதிகளா லர்ச்சித்து அக்னியை வலம் செய்வித்து சிஷ்யனை கந்தாதிகளா லர்ச்சித்துப்ரம்ம மந்திரத்தால் மௌஞ்சி யைக் கட்டி கௌபீனத்தைப் பின்றொ றுங்கும்படிக் கட்டி வாமதேவ மந்திரத்தா லுபவீதமும் அகோரத்தால் கிருஷ்ணஜினமுந் தரித்து ஹ்ருதயத்தா லுத்தரீயங் கொடுத்து அஸ்த்ரத்தால் தண்டம் கொடுத்து அநாமி கையிற் கவசத்தால் பௌத்திரமிட்டு அக்கினியைச் சுற்றி நமஸ்கரித்து பாதத்தை யலம்பி விதிப்படி இருமுறை ஆசமித்து விதிப்படி ஸ்தாபித்த தர்ப்பை யோடு கூடிய பிரம கூர்ச்ச பஞ்சகவ்யத்தைச் சிஷ்யனைக் குடிப்பித்து மீட்டும் மாசமித்து பஞ்ச ப்ரம்ஹங்களாலோ மித்து பின்பு காண்டோபகரணம் செய்வித்தல் வேண்டும்.

பன்னிரண்டாவது உபநயனவிதி.

முற்றிற்று.

—o—

## பதின்மூன்ருவது, காண்டோபகரண விதி.

காண்டருஷியின் பொருட்டு அஸ்த்ரத்தால் ஹோமம் செய்து விரதத்தின் பொருட்டு ரக்ஷாபந்தனம் செய்து காயத்ரியை யுத்தேசித்து சிவகாயத்ரியை எண் முறை ஜபித்து அக்கினியை பிரதக்ஷண நமஸ்காரம் செய்வித்து மீட்டும் அக்கினியை (பரிஷேசனம் செய்து) ஜலத்தால் வளைத்து சிவாஸ்தரத்தால் நூருஹுதி செய்து ஒன்பது சமித்துக்களால் ஈசானத்தால் ஹோமித்து மீட்டும் பரிஷேசனஞ் செய்து சிவகாயத்ரி ப்ரம்ஹாங்கங்களால் தனித்தனி எவ்வேழு பவ்வத்து முறை ஆஹுதி செய்து பூர்ணுஹுதி கொடுத்து பஸ்மத்தால் வந்தனம் செய்து முன் சிவனை உத்வாசனம் செய்து பின்பு அக்கினியை உத்வாசனம் செய்க. செல்வத்திற்குத் தக்கபடி ஆசாரியர் முதலியவர்களைப் பூஜிக்க.

பின்பு ஸ்வர்ண முதலியவற்ருல் செய்யப்பட்ட பிக்ஷாபாத்ரங்களை தத்புருஷத்தா லாசாரிய ரெடுத்து இடதுகையில் தண்டத்தையும் வலதுகையில் பிக்ஷா பாத்திரத்தையும் தரிப்பித்து பவதி பிக்ஷாந்தேஹி என்று வசனித்து சாயரக்ஷையிலும் மறுநா ளுதயத்தி லும் புசிக்கும் பொருட்டு அரிசியை வீடுகள் தோறும் க்ரஹிக்க. தினந்தோறும் மும்முறை ஸ்னனம்செய்து விதிப்படி ஆசமித்து அஸ்த்ர சந்தியிலாவது சிவ சந்தி களிலாவது அநுஷ்டானம் செய்க. சாயரக்ஷை யுதயங் களில் அக்கினியையுண்டாக்கி ஹ்ருதயத்தால் விரதா ஹுதி நான்கும் ஈசானத்தால் ஒன்பது சமித்துக்களால் ஹோமம் செய்க. இவ்வாறு மூன்றுதினம்செய்து நான்காம்நாள் காண்டமோசனம் செய்க.

பதின்மூன்ருவது, காண்டோபகரணவிதி முற்றிற்று.

## பதினான்காவது, காண்டமோசன விதி.

முன்கூறியவாறு அக்கினியை யுண்டாக்கி சத்யோ ஜாதத்தால் நூற்றெட்டாஹுதி செய்து வ்ருதத்தின் உத்வாசனம் செய்து பழைய உபவீத முதலியவற்றை நீக்கி புதிய யஞ்ஞோபவீத முதலியவற்றைத் தரிக்க.

பிறகு அக்கினியை நீரால் வளைத்து வ்யோமவ்யாபி மந்திரத்தால் நூறுஹுதி செய்து ப்ரஜாபதயே காண்ட ருஷயெ ஸ்வாஹா என்று எட்டாஹுதி செய்து இதனற் காண்டமோசனம் செய்து பிறகு நைஷ்டிக பிரமசாரியா யிருத்தல் அல்லது பௌதிக பிரமசாரியாயிருத்தலை நிச்சயித்து மீட்டும் நெய்யால் நூருஹுதி செய்து ஆசமித்து ஈஸ்வரரை நமஸ்கரித்துப் பிறகு பூஜாவிதி யைக்கூறி பரமசிவரைப் பூஜித்து அக்கினியின் வண்ண மான பரமசிவத்தை விதிப்படி பூஜிக்க.

பிறகு குருவை நமஸ்கரித்து அவரிடத்து ருக்வேத மயம் சத்யோஜாதமாகவும் யஜுர்வேத மயம் வாமதேவ மாகவும் சாமவேதமயம் அகோரமாகவும் அதர்வணவேத மயம் தத்புருஷமாகவும் சர்வவேதமயம் ஈசானமாகவும் அங்க மயம் சிவமாகவும் சாக்ஷாத் சிவமயம் காமிகாதி இருபத்தெட்டாகமங்களாகவும் தியானிக்க.

ப்ராம்மணாதி மூன்று வர்ணத்தரும் உபவீதம் சதா தரிக்க. அறுமுகவா; சூத்திரருக்கு ஆகமத்தில் உபவீத மானது தீக்ஷாகாலத்தில் தரிக்க விதிக்கப்பட்டிருக் கிறது.

**காரணம்** :—உபவீதம் உத்தரியம் ஸ்திரீ சூத்ரர்கள் நீக்குக. வேதமந்திரம் சிகை யஞ்ஞோபவீதம் சூத்திரன் தரித்த மாத்திரத்தில் விபரீத க்ரமத்தால் ராஜாவிற்கும் ராஜ்யத்திற்கும் நாசமுண்டாகும்.

இவை முதலிய வசனங்களால் பருத்தி நூலால் மும்முறை மடித்து அதனை மீட்டும் மும்முறை மடித்துச் செய்த யஞ்ஞோபவீதமானது சூத்ரருக்கு ஒன்றும் வைசியருக் கிரண்டும் க்ஷத்திரியருக்கு மூன்றும் ப்ராம்மணருக்கு ஏழும் தரித்தல் வேண்டும்.

**சுப்ரபேதம்** :—சூத்ர நைஷ்டிகன் எப்போதும் தரிக்க. க்ரஹஸ்தன் எப்போதும் தரிக்கலாகா. வைசியனுக்கு விவாக காலமுதல் தரிக்க. சூத்திரனுக்குத் தீக்ஷாகால முதல் தரிக்க. பிராம்மண ஸ்திரீ ராஜபுத்திரி வைசிய பத்தினி இம்மூவராற் செய்யப்பட்ட சூத்திரம் உத்தமம். அவ்வாறில்லாவிடில் சூத்திர கன்னிகையாற் செய்த சூத்திரத்தைக் கொள்ளல் வேண்டும். அன்னிய ஸ்திரீகளாற் செய்யப்பட்ட சூத்திரமானது ப்ரயத்தனத்துடன் நீக்கத்தக்கது.

**அல்லாவிடில் சந்தானம்** :—ப்ராம்மண கன்னியாற் செய்தது சிரேஷ்டம். ப்ராம்மண ஸ்திரீ மத்திமமாகும். பிராம்மண விதவை அதமம் ஆதலால் அதமத்தை நீக்குக. இவ்வாறே க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கட்கு மூவிதமாகும்.

**சுப்ரபேதம்** :—ப்ரம்மதேவரால் தாமரை நூற் சூத்திரத்தை யுண்டாக்கப்பட்டது க்ருதயுகத்தில் தாமரை நூற் சூத்ரமும் த்ரேதாயுகத்திற் பொற் சூத்ரமும் த்வாபரயுகத்தில் வெள்ளி சூத்ரமும் கலியுகத்திற் பருத்திநூற் சூத்திரமும் தரிக்கத்தக்கது. மூன்று சூத்ரம் பிரமசரியத்திற்கும் கிரஹஸ்தருக்கு ஆறும் வானப்ரஸ்தருக்கு ஒன்பதும் யதிகட்குப் பன்னிரண்டுங் கூறப்பட்டது. நாபிக்கு மேலிருப்பது ஆயுர்க்ஷீணம், கீழிருப்பது தனக்ஷயம், நாபிமாத்ரம் தரிப்பது சிரேஷ்டமாகும்.

[மற்ற விஷயம் பிரதிகளில் விடப்பட்டிருப்பதால் அதை நேரிடும்போது வெளிப்படுத்தித் தனியே யனுப்பப்படும்.]

பதினான்காவது, காண்டமோசன விதி.

முற்றிற்று.

—o—

## பதினைந்தாவது, சமாவர்த்தன விதி.

உத்தராயணத்தில் குரு சுக்ர உதயங்களில் மாசி முதலைந்தினும் சித்திரை மாத நீங்கலாகவும் ஸ்வாதி மூலம் அநுஷம் மகம் மிருகசீர்ஷம் அஸ்தம் ரேவதி ரோஹிணி மூன்றுத்தரங்களும் சுபமாகும். இவற்றில் எட்டும் சிறந்தன. ஏழாமிடங்களில் கிரஹங்கள் சுத்தமாகவும் இருத்தல்வேண்டும்.

**காசிபம்** :—அஷ்டமி நவமி ரிக்தை அமாவாசை மத்திமமானதால் இவைகளை நீக்கி அன்னிய திதிகளில் புத குரு சுக்கிரவாரங்கள் சுபமாகும்.

சமாவர்த்தனத்திற்கு முதனாள் வ்ரதத்தைநீக்கி வ்ரதத்தின் பொருட்டு முன் கூறியவாறு நாந்திமுக ஸ்ரார்த்தஞ் செய்து சாயான்னத்தின் முன்யாமத்தில் முன்கூறியவாறு ஸ்நானசமன சகளீகரண ப்ராணாயாம சாமான்யார்க்கிய விக்னேஸ்வர பூஜாசங்கற்பபுண்யாஹ அங்குரார்ப்பண ரக்ஷாபந்தன அக்கினி காரியங்களைச் செய்து பலாச சமித்துடன் பிரம்மாங்கத்தா லோமித்து சிஷ்யனை அஸ்த்ரத்தாற் ப்ரோக்ஷித்து பூர்ணாஹுதியாக அக்கினி விசர்ஜனம் வரைச் செய்து புது வஸ்திரத்தால் மூடி வ்யோமவ்யாபி மந்திரத்தை ஜபித்து தூங்காமலும் பேசாமலும் இருத்தல் வேண்டும்.

மறுநாட் காலையில் அஸ்திரத்தை ஜபிக்க. பிறகு அக்கினியை முன்போற் பூஜித்து மூலத்தால் நூருஹுதி

செய்து ப்ரம்மசாரிய வ்ருதத்தை விட்டு சௌளத்தைப் போல் சிகை புருவம் முழங்கை மணிக்கட்டு வரை நீங்கலாக சர்வாங்கமும் நாவிதனுல் மயிர் நீக்கி அவ் விடத்திற் கண்ணாடியில் தரிசித்து அவிரியுடன் ஸ்னனம் செய்து ஈசாஞதிகளால் நூறு நூருஹுதி செய்து பூர்ணுஹுதி கொடுத்து முஞ்சிபினரை ஞாணை யவிழ்த்து முன்னுபவீதத்தை நீக்கி ஆறிழையுபவீதந் தரித்து ஹ்ருதயத்தால் குண்டல முதலியவற்றை யலங்கரித்து பிறகு கந்தாதிகளைக் கொடுத்து வாமதேவத்தால் கண்ணிற்கு மையிட்டு அகோரத்தால் கண்ணுடியை தரிசிக்க. பிறகு வாமதேவத்தால் பெல்லம் பால் நெய் கலந்த மதுபர்க்கத்தைப் புசித்து ஆசமித்து அக்கினியை ப்ரதக்ஷண நமஸ்காரம் செய்து அதன்முன் குடை பாதரக்ஷை தண்டமுதலியவும் அரிசி பதார்த்தங்களுடன் தரித்து வடக்கு திக்கு நோக்கிச் செல்ல பந்துக்கள் க்ரஹஸ்தாசிரமத்தை யடைவிக்கும்படி திருப்ப அவ் விடத்திலிருந்து வீட்டிற்கு வந்து சமாவர்த்தனத்தின் ப்ரீதியாக வ்யாஹ்ருதிகளால் நான்காஹுதி செய்து பூர்ணுஹுதி கொடுத்து பஸ்ம வந்தனதிகள் செய்து முதலில் சிவத்தை யுத்தாபனம் செய்து பிறகு அக்கினியை யுத்தாபனம் செய்க. ஆசாரியரைப் பூசித்து இஷ்டஜன பந்துக்களுடன் புசிக்க.

பதினைந்தாவது, சமாவர்த்தன விதி
முற்றிற்று.

—o—

## பதினுருவது விவாஹவிதி.

**வீரதந்த்ரம்:**—மாசி நீங்கலாக சர்வ மாதங்களிலும் விவாஹமானது செய்யத்தக்கது. நல்ல சீலமும் ருபமும் தனசம்பத்தும் குலமும் சஹோதரமும் மாத்ரு பித்ரு

வம்சதோஷ மின்மையும் சாஸ்திர சம்மதமானதும் பந்துக்களுடையதும் தனது கோத்தரத்தைச் சேராததும் சந்தோஷமுடையதுமான மணப் பெண்ணைத்தேடிக் கொணர்ந்து கந்த முதலியவற்ரு லலங்கரித்து மந்திரத்தால் வஸ்திர மாங்கல்யங்களை யாசீர்வதித்து முன் கூறியவாறு ஆசமன சகளீகரண ப்ராணயாம சாமான் யார்க்கிய நாந்திமுக ஸ்ராத் தாக்கினிகளைப் பூஜித்து அக்கினியின் மேற்கில் பீட முதலிய ஆசனங்களை யுண்டாக்கி அதன்மேல் பதினறு மரக்கால் நெல்லால் மேடை செய்து அதன்மேல் சர்வாலங்காரத்துடன் தம்பதிகளை வலது பாகத்தில் ஸ்திரீ இடபாகத்தில் புருஷ னிருக்கும் படிச் செய்து முன் கூடியவாறு பத்தினிக்கு ரக்ஷாபந்தனஞ் செய்து சிவமந்திரத்தால் மாலை மாலிய கொடுத்து இருவருடைய கோத்ர நாமங்களை முன்னிட்டு உச்சரித்து அதன் பிதா சகோதரன் மாதுலர்களி லொருவர் வரனுடைய ஹஸ்தத்தில் சொரணத்துடன் ஜலத்தைத் தாரை வார்க்க.

**மச்யபுராணம்** :—இச்சுபதினத்தில் சப்த் ருஷி மண்டலம் வரை மணல்களை ராசிசெய்து அதில் ஆயிரவருஷத்தின் முடிவி லொருமுறை ஒவ்வொரு மணலெடுத்து மணல் முற்று முடியுங்கால் வரை என் வம்சததில் என்னுடன் முன்பத்துப் பின்பத்துத் தலைமுறையும் என் மாத்ரு வம்சங்களிலும் பித்ரு வம்சங்களிலுமுள்ள பித்ருக்களை நரகத்தில் நீக்கி சாஸ்வதமான ப்ரம்மலோக வாசஞ் சித்திக்கும் பொருட்டுங் கோதுமைகளை சந்தர மண்டலவரை ராசி செய்து அதிலாயிர வருஷத்திற் கொருமுறை ஒவ்வொன்ருக வெடுத்து அக்கோதுமை முற்று முடியும்வரை முன் கூறியவர்கள் சாஸ்வத விஷ்ணு லோக வாசஞ் சித்திக்கும் பொருட்டும், அவ்வாறே முன்

கூறியவர்கள் சாஸ்வத ருத்ரலோக வாசஞ்சித்திக்கும் பொருட்டும் அக்கினிஷ்டோமாதி யனேக யாகபலங்கள் சித்திக்கும் பொருட்டு மத்ஸ்யபுராண வாக்கியப்படி கன்னிகாதான பல முற்றிலு மடையும் பொருட்டும் அலங் காரத்துடன் கூடிய கன்னிகாதானப் பெயருடைய மஹா தானத்தைக செய்கிறேன்.

பிறகு தேவதேவனை நமஸ்கரித்து விஞ்ஞாபித்து அநுஞ்ஞைப் பெற்று சம்பாவித்து ஆகமவசனத்தின்படி அங்கபூஷணம் மாங்கல்ய சூத்திரங்களை சம்பாதஹோ மஞ் செய்து க்ஷௌம் உமாமஹேஸ்வராய நம: என்று மந் திரத்தால் தரித்து அதன் முடியின் மேல் அம்மந்திரத் தால் பஸ்மஞ்சாற்றி பிறகு பத்தினியின் நெற்றியில் அவ் வாறே பஸ்மஞ்சாற்றி பிறகு அதனைத் தனது ஆன்மா வைச் சிவமாகவும் பத்தினியைச் சத்திரூபமாகவுந் தியா னித்து மூலத்தால் பிரணவாதிஸ்வாஹாந்தம் நூறுஹுதி செய்து மதுபர்க்கம் புசிக்கச் செய்து பூதபலியை சிவகா யத்திரி மந்திரத்தாற் கொடுத்து மீட்டுமாசமித்து ஹ்ரு தயத்தால் நூறுஹுதி செய்து அக்கினியின் தென்பாகத் திற் ப்ராணுக்கினியில் சேர்க்கவேண்டும். பிறகு ஹ்ரு தய மந்திரத்தால் கோவின் கன்றை தரிசிப்பித்து ஸ்வா ஹாந்தம் சிவ மந்திரத்தால் நூற்றெட்டா ஹுதி செய்க. மீட்டும் அக்கினியின் இடது பாகத்தில் ஏழடி சென்று மேற்கில் அம்மியை வைத்து அக்ஷதை முதலிய வற்றல் அர்ச்சித்து வாமமந்திரத்தால் பத்தினியின் கையை பதி யின் வலது கையாற் பிடித்து க்ரமமாக ஏழடி சென்று வலது பாதத்தை பதியினிரண்டு கைகளாற் பிடித்து எடுத்து சிவகாயத்ரி மந்திரத்தால் அம்மியின்மீது வைத் திடுக. பிறகு மாமஹேஸ்வர மந்திரத்தால் மும்முறை பொரியிட்டு தேவேசரை நமஸ்கரித்து வ்யோமவ்யாபி மந்திரத்தால் ப்ராயற்சித்தாஹுதி செய்து பூர்ணுஹுதி

கொடுத்து பஸ்ம வந்தனஞ் செய்து முதலிற் சிவத்தை உத்வாசித்து பிறகு அக்கினியை உத்வாசனஞ் செய்க.

பிறகு ஔபாசனுக்கினியை தினந்தோறுஞ் சாயரக்ஷை யுதயங்களில் பிரமாங்கங்களால் ஓமஞ் செய்க.

பிறகு மணப்பெண்ணின் கையை முன்போல் க்ரஹித்து க்ரஹப்பிரவேச சமயத்தில் வரனது பாதத்தை பாலால் அலம்பி சர்வாலங்கார பூஷிதமாயும் முத்து மாலைகளாற் சோபிக்கப்பட்டதாயும் சத்யோஜாத மந்திரத்தாற் சோதிக்கப்பட்டதாயுமுள்ள சுபமான க்ரஹத்திற் மேற்கட்டி தலையணை முதலியவைகளையுடைய கட்டிலில் நான்கு சுமங்கலிகளால் சயனத்தைச் செய்வித்து தம்பதிகளின் மத்தியிற் சிறு கல்லமைத்து அதனை பலம் உள்ள கல்லிருப்பதாக த்யானித்து அந்தக் கல்லுடன் ராத்திரியில் ஸ்திரீயுடன் சயனிக்க. அவ்விடத்தில் திதிபதியை நினைத்து சோம கந்தர்வ அக்கினி மந்திரங்களை நம முடிவாக மும்முறை முப்பது ஜெபிக்க. அன்றிரவில் தொடுதலும் பேசுதலுங் கூடா.

**வீரதந்தரம்** :—தம்பதிகளின் சயனகாலத்தில் மூன்றுராத்திரிவரை தொடுதலும் வார்த்தை யாடுதலுங் கூடாது.

உதயத்தில் ஸ்னனஞ் செய்து ஆசமித்து விதிப் படி ஔபாசனந் தினம்தோறுஞ் செய்க.

பிறகு நான்காம் நாள் உதய காலத்தில் தைலத்தால் மணப்பெண்ணோடு ஸ்னனஞ் செய்து ராத்திரியில் முன் போல் அக்கினியை யுண்டாக்கி ப்ரம்மாங்கத்தாலோமித்து பிறகு ஓம் ஹாம் அருந்தத்யை நம: என்னும் மந்திரத்தால் அருந்ததியை பத்தினிக்குத் தரிசிப்பித்து பதிவிரதாபாவஞ் தெரிவித்து நமஸ்கரித்து முன்வைக்கப் பட்ட அம்மியை ஹ்ருதயத்தால் உத்தாடனஞ் செய்து

சிவ மந்திரத்தாற் சயனங்கற்பித்து அச்சயனத்தில் தம்பதிகள் வார்த்தையாடுதல் செய்க.

பிறகு ஐந்தாம் நாள் தன்னுடன் தன் வீட்டிற்குச் சென்று மீட்டும் வீட்டில் பலியிடுக.

**வீரதந்திரம் :**—மாத்ரு வம்சத்தில் ஐந்து தலைமுறையும் பித்ரு வம்சத்தில் ஏழு தலைமுறையும் உள்ள கன்னிகையை விவாகஞ் செய்வானாகில் குரு பத்தினியைப் புணர்ந்ததற்குச் சமமாகும்.

**மநுவிஞ்ஞானம் :**—பித்ருவின் ஐந்து தலைமுறையும் மாத்ருவின் ஏழு தலைமுறையுந் தன்னுடன் பிறந்தவள் முறையாயும் மாதாவின் முறையாயும் வருவோரை நீக்கி இதர கன்னிகளை விவாகஞ் செய்க.

**ஸ்காந்த புராணம் :**—எட்டு வயது உடையவள் கௌரி ஒன்பது ரோகிணியாகும். பத்து கன்னியாகும். பன்னிரண்டு வ்ருஷலை என்னப்படுவள். கௌரியைக் கொடுத்தவர்க்கு தேவலோகம், ரோகணிக்கு வைகுண்டம், கன்னிகைக்கு ப்ரம்மலோகம், ரஜஸ்வலைக்கு ரௌரவநரகம் உண்டாகும். பன்னிரண்டு வயதையடைந்த கன்னிகையை விவாகமில்லாது தன்னிடம் வைத்திருக்கின் அக்கன்னிகையின் மாதமாத முண்டாகுப் ரஜசை தனது பித்ருக்கள் புசிப்பார்கள் எவன் மனிதனைச் சிறிது பொருளிற்கு விக்கிரயித்து அத்தனத்தை யிச்சிக்கிறானோ அவனுடைய மல மூத்திரங்களை பித்ருக்கள் புசிப்பார்கள்.

வவதிகர்லக்ஷணம், வாதராயணராற் கூறியப்படி யஞ்ஞயத்திற்கும் விவாகத்திற்கு மேடையினளவு சுருக்கமாகக் கூறுகிறேன். வேதியருக்கு இருபத்தொரு முழம்' க்ஷத்ரியருக்கு பதினைந்து, வைச்யருக்கு ஒன்பது,

VERIFIED 1985

சூத்ரருக்கு ஏழு, சிக்பிக்கு ஐந்தெனக் கூறப்படுகிறது. இருபத்தொருமுழ மிடை வெளியுடைய மேடை யுத்தமம் அவ்வாறு பூமி கிடையாவிடில் நான்கு வருணத்து மனிதற்கு மேற் கூறப்படும் விதியை அனுசரிக்க.

பின்னும் அம்சுமதி—விவாகத்திற்கு பிராம்மணருக்கு ஏழு முழம் வேதிகையும், க்ஷத்ரியருக்கு ஆறும், வைசியருக்கு ஐந்தும், சூத்ரருக்கு நான்கும், கூறப்படுகிறது. அதுவுங் கிடையாவிடில் எல்லா வருணத்தரும் நான்கு முழங் கொள்ளலாம். அதற்குக் குறைவும் அதிகமுமான வேதிகையானது எஜமானனுக்கு மரணத்தைத் தரும்.

**வீரதந்திரம் :**—பதினான்கு முழ நீளமும் எட்டு முழ அகலமும் நானாவித சித்ரத்துடன் கூடினதுமான பட்டிறைற் செய்தது அல்லது பரித்தி நூலாற் செய்தது மத்திரவாசமெனக் கூறப்படும். மேல் மாங்கல்யவிதியைக் கேளுங்கள்.

பதினாறு குன்றியினிடைமுத லிரண்டு குன்றியாக முப்பத்திரண்டு குன்றினிடைவரை மங்கலியத்திற்குப் பொன்னினளவாகும். கணேச வுருவமாவது லக்ஷ்மியினுருவமானது சிவலிங்க வுருவமாவது மாங்கலியத்தைச் செய்ய வேண்டும். ஐந்து குண்டுடன் கூடியதும் பக்கத்தில் த்வாரமுடையதும் இரட்டைப் பொன்சரடு கூடியதுமான மாங்கலியம் கன்னிகையின் கழுத்திற்கு அனுகூலம் உடையதாகும்.

பதினாறுவது, விவாஹம் முற்றிற்று.

சைவஷோடசப் பிரகாசிகாவிதி முற்றிற்று.

—o—

22611

VERIFIED 1989

Hamsas Press, Madras-2.